வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 28.05.2022 சனிக்கிழமை | இதழ் : 173 | பக்கங்கள் : 16

# யாழ். விமான நிலையம் மூடப்படுகின்றது?

யாழ்ப்பாணம், மே 28

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நம்பகரமாக அறிய வருகின்றது.

கொரோனா பரவலைத் தொடர்ந்து 2020ஆம் ஆண்டு மார்ச் 15ஆம் திகதி யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் போக்குவரத்துகள் இடை நிறுத்தப்பட்டிருந்தன. கொரோனா நெருக்கடி நிலைமை தீர்ந்து அது சார் கட்டுப்பாடுகள் தளர்த்தப் 15

## டெங்கு காய்ச்சலுக்கு 5 வயது சிறுமி மரணம்!

### யாழ்ப்பாணத்தில் துயரம்

யாழ்ப்பாணம், மே 28

டெங்கு காய்ச்சலால் யாழ்ப்பாணத்தில் 5 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

உடுவிலைச் சேர்ந்த பரசுதன் ஜோயிதா (வயது-5) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது, 15

## யாழில் எரிவாயு விநியோகம் புதிய நடைமுறை அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 28

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு குறைந்த சிலிண்டர்களே கிடைக்கப் பெறுவதால் அவற்றை சீரான முறையில் நியாயமான விலையில் வழங்க ஏதுவாக பொறிமுறை ஒன்றை வகுத்துள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.

எரிவாயு தேவையானவர் 15

## சைக்கிள் கைப்பிடி குத்தியதில் காயமடைந்த சிறுவன் மரணம்!

கிளிநொச்சி, மே 28

சைக்கிளின் கைப்பிடி கம்பி வயிற்றில் குத்தியதில் படுகாயமடைந்த சிறுவன் சிகிச்சை பலனின்றி மரணமானார்.

கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தநிலையில் பூநகரி மத்திய கல்லூரியில் தரம் 3இல் கல்வி கற்ற சிவகரன் சஜீவன் (வயது 8) என்பவரே இவ்வாறு 15

## சவேந்திர சில்வாவை விசாரிக்க குழுவை நியமித்தார் ஜனாதிபதி!

கொழும்பு, மே 28

மிரிஹானை சம்பவம் தொடர்பில் விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட முன்னாள் தளபதிகள் அடங்கிய குழு, இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவையும் விசாரிக்கும் என்று அறிய வருகின்றது.

இராணுவத் தளபதி பதவியிலிருந்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமையுடன் ஜெனரல் சவேந்திர சில்வா பதவி விலகுகிறார். இந்நிலையிலேயே அவர்மீது விசாரணை நடத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விசாரணைக் குழுவை நியமித்துள்ளார்.

அண்மையில், ஜனாதிபதியின் இல்லம் அமைந் 15

## எரிபொருள் தட்டுப்பாட்டால் இலங்கையரின் உரிமை மீறல்!

### மனித உரிமைகள் ஆணைக்குழு விசனம்

கொழும்பு, மே 28

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இலங்கையர்களின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் எரிசக்தி அமைச்சு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத் 15

## மகிந்தவை பாதுகாப்பதற்காக கடற்படையை நியமித்த யோஷித!

கொழும்பு, மே 28

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை பாதுகாப்பதற்காக அவரின் புதல்வரும் கடற்படை அதிகாரியுமான யோஷித ராஜபக்ஷ 372 கடற்படை சிப்பாய்களை நியமித்தார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பதவியிலிருந்து விலகிய பின்னரும் அலரி மாளிகையை பாதுகாக்கும் பணியில் கடந்த மே 23ஆம் திகதி வரை அந்த கடற்படை சிப்பாய்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையிலேயே இவர்கள், அவர்களின் கடற்படை முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்றும் தெரிய 15

## இயற்கைக்கான 'நோபல் பரிசு'; முதல் தடவையாக இலங்கைக்கு!



கொழும்பு, மே 28

இயற்கைக்கான நோபல் பரிசு என அழைக்கப்படும் 'வீனியர்' விருது இலங்கையின் ஆய்வாளரும் இயற்கை ஆர்வலருமான கலாநிதி 15

## உணவு பாதுகாப்பு யோசனை திட்டம் மூன்று பல்கலைகழகங்கள் தயாரிப்பு

கொழும்பு, மே 28

நாட்டின் விவசாயம் எதிர்கொள்ளும் அண்மைக்கால சூழலைக் கருத்தில் கொண்டு எதிர்கால விவசாய அபிவிருத்தி மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான முன்மொழிவுகளை மூன்று பல்கலைக்கழகங்களின் விவசாயப் பேராசிரியர்கள் குழு தயாரித்துள்ளது.

பேராதனை, ருகுணை, சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களை சேர்ந்த பேராசிரியர்கள் புத்தி மாரம்பே, ஜனேந் 15

## விமலின் மனைவிக்கு இரு ஆண்டுகள் சிறை!

கொழும்பு, மே. 28

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸவின் மனைவியான சசி வீரவன்ஸவுக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதவான் புத்திக ஸ்ரீ ராகலவால், நேற்று இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

போலியான தகவல்களை வழங்கி, இராஜதந்திர கடவுச்சீட்டை பெற்ற குற்றச்சாட்டு தொடர்பான வழக்கிலேயே இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஒரு லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. (அ)

## 21ஆவது திருத்தச் சட்டம் 3ஆம் திகதி இறுதிமுடிவு!

### நேற்றைய கூட்டத்தில் கூட்டமைப்பு பங்கேற்கவில்லை



கொழும்பு, மே 28

அரசமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான இறுதி முடிவை எதிர்வரும் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை எட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

21ஆவது திருத்தச் சட்டம் மூலம் தொடர்பான பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் 15

## மக்கள் புதிய ஆணையை வழங்க விரைவில் தேர்தல்கள் வேண்டும்!

### தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்து

கொழும்பு, மே 28

மாற்றத்தைக் கொண்டுவரக்கூடியவர்களை மக்கள் தெரிவு செய்து புதிய ஆணையை வழங்குவதற்கு வசதியாக தேர்தல்கள் சாத்தியமானளவு விரைவாக நடத்தப்படவேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை கோரியிருக்கின்றது.

இது தொடர்பாக தேசிய சமாதானப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தற்போது நாட்டு மக்கள் முன்னென்றும் இல்லாத கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத் தலைவர்கள் கூறுகின்ற விடயங்களுக்கும் இடம்பெறுகின்ற நிகழ்வுகளுக்கும் இடையே வேறுபாடு காணப்படுகிறது. கப்பல்களில் இருந்து எரிபொருட்கள் இறக்கப்படுவதாக உறுதிமொழிகள் கூறப்படுகின்றன. ஆனால் பல எரிபொருள் நிரப்பு நிலை 15

## இப்படியும் நடக்கிறது...!

அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்க விருப்பதாக பிரதமர் அலுவலகத்தை மேற்கோள்காட்டி செய்திகள் வெளிவந்த மறுதினமே அதனை பிரதமர் அலுவலகம் மறுத்திருக்கின்றது.

அண்மைக்காலமாக இந்த அரச அலுவலர்கள் பற்றிய செய்திகளே சமூக வலைத்தளங்களில் பேசுபொருளாகியிருக்கின்றன.

அவசியமான அலுவலர்களை மாத்திரம் பணிக்கு வருமாறு அழைப்பது என்று அரசாங்கம் முடிவெடுத்த காலத்திலிருந்து, அந்த விவகாரம் பேசுபொருளாகியிருக்கின்றது.

நாடு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளவேண்டுமானால், சர்வதேச நாணய நிதியத்தின் கால்களில் விழுவதைத் தவிர, வேறு வழியில்லை என்று ஒட்டுமொத்த நாடுமே விரும்பியது. விரும்பியது என்பதை விட வலியுறுத்தியது என்றே சொல்லலாம். அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றிய எந்தவித சிந்தனையும் இன்றியே அதனை வலியுறுத்தியது முழு நாடும். சர்வதேச நாணயத்திடம் செல்வதில்லை என்ற பிடிவாதத்தோடு இயங்கிய ராஜபக்ஷ அரசும் கடைசியில் நாட்டின் நெருக்குவாரத்திலிருந்து தப்ப, சர்வதேச நாணய நிதியத்தை நாட முடிவுசெய்தது.

சர்வதேச நாணய நிதியம் விதிக்கும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை வந்த பின்னர், அவர்களின் நிபந்தனைகளால் பாதிக்கப்படப் போகிறவர்கள், இனி அதற்கு எதிராக பொங்கி எழ முடியாத நிலை.

இந்த நிலையில்தான், இலங்கையில் அரச செலவினங்களை குறைப்பதே அதற்குமுன் உள்ள முதல் தெரிவு என்று எச்சரிக்கை மணி அடித்த சர்வதேச நாணயநிதியம், அளவுக்கதிகமாக இருக்கும் அரச சேவையாளர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று நிபந்தனை விதிக்கவிருக்கின்றது.

இதனைத் தெரிந்துகொண்டே, அரசாங்கம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைபோல, எரிபொருள் பற்றாக்குறையை காரணம்காட்டி, அவசியமற்ற அரச அலுவலர்களை வீட்டிலிருக்குமாறும், அவசியமானவர்கள் மாத்திரம் பணிக்கு வருமாறும் அழைப்பு விடுத்தது. அது என்ன, அவசியமானவர்கள்? அப்படியெனில், அவசியமில்லாமலும் சிலர் பணியில் இருக்கின்றனர் என்றுதானே அர்த்தம்? அப்போ, சர்வதேச நாணய நிதியம் சொல்வதுபோல, அவசியமில்லாமல் அரச அலுவலர்கள் பணியில் இருக்கின்றனர் என்பது உண்மையாகின்றதா? இந்தக் கேள்விகள் மனதில் எழுந்தாலும், சம்பள அதிகரிப்பு என்பது இன்று அவசியமானதுதான். பொருட்களின் விலைகள் இரண்டு மடங்கு அல்ல அதனையும் தாண்டி பல மடங்கு உயர்ந்துவிட்டது. எந்த மனிதனும் தனக்கு வாழ்க்கையைக் கொண்டுநடத்த வருமானம் போதாத நிலை இருக்கும்போது, அவனால் தனது பணிகளை சரியாக செய்யமுடியாத நிலையே ஏற்படும். அவசியமான பணியாளர்களை மாத்திரம் வேலைக்கு அழைத்தாலும், அவர்களும் தமது தனிப்பட்ட மனஉழைச்சல்கள், தனிப்பட்ட நெருக்கடிகளுடன் பணியாற்ற முடியாத நிலையே ஏற்படும். இது, சமூகத்தில் மற்றுமொரு நெருக்கடியையே ஏற்படுத்தும். எனவே, அவசியமில்லாத பணியாளர்களை என்ன செய்வது என்பதை நாம் சொல்வது சரியானதாக இருக்காது. ஆனால், அவசியமான பணியாளர்களுக்காவது இன்றைய பொருளாதார நிலைமையை சமாளிக்க உதவும் வகையில் சம்பள அதிகரிப்பு என்பதும் அவசியமானதுதான்.

தனியார்துறை ஊழியர்கள் சம்பள அதிகரிப்பும் அதேபோன்ற அவசியமானதுதான். தனியார் நிறுவனங்களில், அளவுக்கதிகமான பணயாளர்கள் நிச்சயம் இருக்கப்போவதில்லை. தனியார் எப்போதுமே தமக்கு அவசியமானவர்களைத்தான் பணிக்கு அமர்த்துவார்கள். ஆனால், அவர்களுக்கும் சம்பள அதிகரிப்பு வழங்கவேண்டும் என்று அரசு கட்டளை பிறப்பிக்க முடியாது. அப்படி நடந்தால், என்ன நடக்கும்? தத்தமது சக்திக்கு அப்பாற்பட்ட செலவை செய்யமுடியாத தனியார் நிறுவனங்கள், ஆட்களை குறைத்தே சம்பள அதிகரிப்பை செய்யவேண்டியிருக்கும். இதனை அனுமதிப்பது, தனியார் துறையையும் பாதிக்கவே செய்யும். இன்று, நாட்டின் பொருளாதார நெருக்கடி பல தொழிற்சாலைகளை மூடவைத்திருக்கின்றது. அதிகம் ஏன், நாம் அன்றாடம் உண்ணும், பிஸ்கட்டுக்கள் தயாரிப்பதற்கும் சில மூலப்பொருட்களை இறக்குமதி செய்யவேண்டிய தொழிற்சாலைகள், அது இப்போது சாத்தியமாகாததால் தமது உற்பத்தியை குறைக்கவேண்டிய நிலையில் இருக்கின்றன.

இந்த நெருக்கடியை சமாளிக்க, அரசாங்கமே தனியார் துறையிலிருக்கும் ஊழியர்களுக்கும் தற்காலிகமாகவாவது மாதாந்த மேலதிக கொடுப்பனவு ஒன்றை வழங்கி, தனியார் துறையின் வீழ்ச்சியை தடுத்து நிறுத்தவேண்டும்.

இதனையே மேற்குலக நாடுகள் செய்துவருகின்றன.

இதுபோன்ற நடவடிக்கைகளை ஆக்கபூர்வமாக சிந்தித்து செய்யவில்லை என்றால், இந்த நாட்டில் இரண்டு வர்க்கத்தினரே இருப்பார்கள். ஒன்று, வசதி படைத்தவர்கள். மற்றயது, ஒன்றுக்கும் வழியில்லாத கடைநிலையினர். நடுத்தர வர்க்கம் என்ற ஒன்றே நமது நாட்டில் காணாமல் போய்விடும்.!

- ஊர்க்குருவி

# சமூகவலைத்தளங்கள் ஊடாக வன்முறையை தூண்டியவர் கைது!

கொழும்பு, மே 28

நாட்டின் பல பகுதிகளிலும் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைகளின் போது சமூக வலைத்தளங்கள் ஊடாக வன்முறையைத் தூண்டும் வகையிலான பதிவுகளை பகிர்ந்த சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

நாட்டின் பல பகுதிகளிலும் கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் பொலிஸாரால் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைய வன்முறைகள் இடம்பெற்ற இடங்களுக்கு நபர்களை அழைக்கும் செயற்பாடுகள் சமூக வலைத்தளங்களின் ஊடாகவே ஒருங்கிணைக்கப்பட்டமை தெரியவந்தது.

இது தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளில் சில சமூக வலைத்தள குழுக்கள் பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டன. இவற்றின் நிர்வாகிகள் கணனி குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய நேற்றுமுன்தினம் கம்பஹா - ஹரகம்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடைய நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் அவரது முகநூல் ஊடாக வன்முறையைத் தூண்டும் வகையிலான பதிவுகளை பகிர்ந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அதற்கமையவே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவருக்கு எதிராக கணனி குற்றச்சட்டம், தண்டனை சட்டக் கோவை மற்றும் பொலிஸ் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் அவருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# ஆஸி. இலங்கை மாணவர் நிதியம்; உதவித் தொகையை அதிகரித்தது

சிட்னி, மே 28

அவுஸ்திரேலியாவிலிருந்து கடந்த 34 வருட காலமாக இயங்கிவரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியம், இந்த ஆண்டு முதல், உதவி யைப் பெற்றுவரும் மாணவர்க ளின் நிதிக் கொடுப்பனவை அதிகரித்துள்ளது.

இலங்கையில் நீடித்த போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட ஏழைத் தமிழ் மாணவர்களுக்கு கடந்த 1988ஆம் ஆண்டு முதல் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஊடாக உதவி வரும் இலங்கை மாணவர் கல்வி நிதியம், போர் முடிவுற்ற பின்னர் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களையும் தெரிவுசெய்து உதவி வருகின்றமை குறிப்பிடத்தகுந்தது.

அவுஸ்திரேலியாவில் வதியும் மனிதநேயம் மிக்க அன்பர்களின் ஆதரவில் இயங்கி வரும் இலங்கை மாணவர் கல்வி நிதியம், இலங்கையில் யாழ்ப்பாணம் சிறுவர் அபிவிருத்தி நிலையம், வவுனியா நலிவுற்ற சமூக அபிவிருத்திக்கான தன்னார்வ அமைப்பு, மலையக சமூக அபி விருத்தி நிறுவனம் மற்றும் கம் பஹா மாவட்டத்தில் விஜயரத் தினம் இந்து மத்திய கல்லூரி ஆகியனவற்றின் ஊடாக மாண வர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவி வருகின்றது.

இந்த உதவியின் மூலம் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, கம்பஹா, மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களும் மலையகத்தில் நுவரேலியா மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களும் பயனடைந்து வருகின்றனர்.

இலங்கையில் சமகாலத்தில் தோன்றியிருக்கும் பொருளாதார நெருக்கடி - வாழ்க்கைச் செலவு - விலைவாசி உயர்வு முதலானவற்றை கவனத்தில் கொண்டு இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் கல்வி நிதியத்தின் உதவியை பெறும் மாணவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் மூவாயிரம் ரூபாய் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சாரதி அனுமதி பத்திரத்துக்கான விசேட பரீட்சைகள் ஜூன் 4, 5இல்!

யாழ்ப்பாணம், மே 28

யாழ். மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் சாரதி அனுமதிப் பத்திரத்துக்காக விண்ணப்பித்து எழுத்துப் பரீட்சைக்கான அனுமதி அட்டையை பெற்ற பரீட்சார்த்திகளுக்கான விசேட பரீட்சைகள் வரும் ஜூன் 4, 5ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் காலை 9.30 மணி, முற்பகல் 11 மணி, நண்பகல் 12.30 மணி என மூன்று அமர்வுகளாக இந்தப் பரீட்சைகள் நடைபெறும்.

சாரதி அனுமதிப் பத்திரத்துக்காக ஜூன் 30ஆம் திகதி வரை அனுமதி அட்டையைப் பெற்றவர்கள் பரீட்சை அனுமதி அட்டை, அதன் நிழல்படபிரதி, தேசிய அடையாள அட்டை, மருத்துவ சான்றிதழ் என்பவற்றுடன் வருகை தந்து பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்று உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஐ)

# அத்தியாவசிய இறக்குமதிகளுக்காக டொலர்களை வழங்கும் மத்திய வங்கி

கொழும்பு, மே 28

அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக வர்த்தக வங்கிகள் ஊடாக டொலர்களை வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கி இணங்கியுள்ளது.

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கத்துக்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்பவர்கள் தங்கள் இறக்குமதிக்காகப் பயன்படுத்திய 'சப்ளையர் கடன் வசதியை' பயன்படுத்துவதை நிறுத்துமாறும் மத்திய வங்கியின் ஆளுநர் இறக்குமதியாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதற்கு மாற்றாக வர்த்தக வங்கிகள் ஊடாக டொலர்கள் வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (அ)

# 'ஒரே நாடு ஒரே சட்டம்' செயலணியின் பதவிக்காலம் இனி நீடிக்கப்படமாட்டாது

கொழும்பு, மே 28

'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற ஜனாதிபதி செயலணியின் பதவிக்காலம் நீடிக்கப்படமாட்டாது என அதன் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், ஒரே நாடு ஒரே சட்டத்துக்கான பரிந்துரைகளை ஏற்கனவே தயாரித்துள்ளதாகவும் அந்த அறிக்கை விரைவில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்த ஜனாதிபதி செயலணியானது 2021 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 26 ஆம் திகதி ஜனாதிபதியினால் ஸ்தாபிக்கப்பட்டதுடன், இந்த வருடம் பெப்ரவரி 28 ஆம் திகதி மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது. இதன்படி, ஒரே நாடு ஒரே சட்டம் என்ற ஜனாதிபதி செயலணியின் பதவிக்காலம் இன்று நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு
Eelanadu
28.05.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 14

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# தமிழ் தேசிய இணக்கப்பாட்டுக்கான தேவை?

நாடு எவ்வாறு ஒரு கையறு நிலையில் இருக்கின்றதோ - அவ்வாறான தொரு நிலையில்தான், தமிழ் தேசிய அரசியலும் இருக்கின்றது. கூட்ட மைப்பின் எதிர்காலம் கேள்விக்குறியோடு நகர்கின்றது. கூட்டமைப்புக்கு மாற்றான தலைமைத்துவத்தை வழங்கப் போவதாகக் கூறியவர்களால், ஆகக் குறைந்தது தங்களையே ஒழுங்குபடுத்திக் கொள்ள முடியவில்லை. தாங்கள் மட்டுமே சரியானவர்களென்று, வாதிடுவதை ஓர் அரசியலாகக் கொண்டிருக்கும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் எதிர்காலமும் மிகவும் மங்கலாகவே தெரிகின்றது. மணிவண்ணன் தலைமையிலான அணியினர், தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கான உரிமையை கோரி வருகின்றனர்.

ஏனைய சிறிய கட்சிகளாக தங்களை அடையாளப்படுத்தி இருப்பவர்கள் அனைவருமே, தமிழ் மக்களின் ஆதரவை பெறக்கூடிய வல்லமையுடன் இல்லை. தனிப்பட்ட முரண்பாடுகளுக்காகவும், பிடிவாதங்களுக்காகவும் கட்சிகள் உருவாகும் சூழலே காணப்படுகின்றது. மொத்தத்தில், தமிழ் கட்சிகள் என்னும் பெயரில் விவாதங்கள் இடம்பெறுகின்றதே தவிர, ஆக்க பூர்வமாக எதுவும் இடம்பெறவில்லை. இந்த நிலையில் தமிழ் தேசிய அரசியலின் எதிர்காலம் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது - என்பது மட்டுமே உண்மை. இது தொடர்பில் ஈழநாடு தொடர்ச்சியாக எச்சரித்து வந்திருக் கின்றது. ஆனால், தமிழ் சூழலில் முன்னேற்றங்களைக் காண முடிய வில்லை.

மோசமான பொருளாதார நெருக்கடி இலங்கை தொடர்பான பார்வையை மாற்றியிருக்கின்றது. அதாவது, பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப் பட்டிருக்கும் ஒரு நாடாகவே இலங்கை நோக்கப்படுகின்றது. இந்த நிலை யில், இலங்கையின் மனித உரிமைகள் மீறல்கள் விவகாரம் மற்றும் தமிழ் மக்களின் பிரத்தியேக விடயங்கள் கூடுதல் கவனத்தை பெறப்போவ தில்லை. அதுபற்றி பேசப்பட்டாலும்கூட, அது பொருளதார நெருக்கடியை கருத்தில் கொண்டுதான் பேசப்படும். பெரும்பாலும் தமிழர் விவகாரம் ஓரத்தில் கிடக்கும் விடயமாகச் சுருங்குவதங்கான சூழலே காணப்படுகின்றது. இது தொடர்பில் தமிழ் தேசிய தரப்புகள் என்போர், சிந்தித்து செயல்பட வேண்டும். தங்களுக்குள் ஒரு தேசிய இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வது அவசியமானதும் - அவசரமானதுமாகும். அவ்வாறானதோர் இணக்கப்பாடு, அரசியல் வேலைத்திட்டத்தையும் அதேவேளை தமிழர் தாயகத்துக்கான பொருளாதார வேலைத் திட்டத்தையும் கொண்டிருக்க வேண்டும்.

ஒப்பீட்டு அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே, தமிழ் மக்களுக்கான தலைமைக்கான அங்கீகாரத்துடன் இருக்கின்றது. பிராந்திய மற்றும் சர்வதேச மட்டத்திலும், கூட்டமைப்பின் குரலே செவிமடுக் கப்படுகின்றது. இதற்கு, கூட்டமைப்பின் ஆசனங்களின் எண்ணிக்கையும் ஒரு காரணமாகும். ஆனால், தமிழ் தேசிய நிலையில் நோக்கினால், கூட்ட மைப்பு பலமான நிலையிலிருப்பதாகக் கூறமுடியாது. சம்பந்தனுக்கு பின்ன ரான கூட்டமைப்பின் எதிர்காலம் ஊலசாடிக் கொண்டிருக்கின்றது. தொடர்ந் தும் பாராளுமன்றம் செல்ல முடியாத நிலையிலிருக்கும், இராஜவரோ தயம் சம்பந்தன் - தொடர்ந்தும் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழு வின் தலைவராக இருக்கும் நிலையிலும் இல்லை. அடுத்ததாக ஒரு வரை நியிமிக்க வேண்டியிருக்கின்றது. அது யாரென்பதில் சிக்கல்கள் உண்டு.

விடயங்களை கொழும்புடனும், இராஜதந்திர தரப்புகளுடனும் கையாள க்கூடிய ஒருவரால்தான், அந்தப் பொறுப்பை வகிக்க முடியும். இது தொடர்பில் கூட்டமைப்புக்குள் ஓர் இணக்கப்பாட்டில் இல்லை. இவை அனைத்தையும் சேர்த்து சிந்திக்கும்போதுதான், தமிழ் தேசிய அரசியல்பரப்பில், கட்சிகளுக் கிடையில் ஒரு தேசிய இணக்கப்பாடு அவசியமென்று நாம் வலியுறுத்து கின்றோம். ஒரு நெருக்கடிகால தேவையென்னும் வகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இதற்கான அழைப்பை விடுக்கலாம். பொது வேலைத்திட்டம் ஒன்றை வகுத்து, அனைவரையும் அதற்குள் இணையு மாறு கோரலாம். அந்த வேலைத்திட்டம், நீண்டகால மற்றும் குறுகிய கால இலக்கின் அடிப்படையில் திட்டமிடப்பட வேண்டும்.

# சி. ஐ. டி. முன்பாக மகிந்த!

- அனந்த் பாலகிட்ணர் -

*இலங்கையின் அண்மைக்கால அரசியல் வரலாற்றில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் இருந்த ஒருவர் குற்றப்புலனாய்வு பிரிவின ரால் ஒரு சந்தேக நபரைப்போல விசாரிக்கப் பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.*

*தற்போதைய பாராளுமன்ற உறுப்பின ரான முன்னாள் ஜனாதிபதியும் முன்னாள் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ கடந்த 9ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பாக குற்றப்புலனாய்வு (சி. ஐ. டி) பொலிஸாரால் நேற்று முன்தினம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.*

*கடந்த 9ஆம் திகதி நாடளாவிய ரீதியில் பல்வேறு இடங்களிலும் வன்முறைகள் வெடித்து உயிர்ச்சேதம், பொருட்சேதம் என்பவை ஏற்பட்டிருந்தன.*

*பிரதம மந்திரியின் வாசஸ்தலமான "அலரி மாளிகையில்" கடந்த மே 9ஆம் திகதி பிரதம மந்திரியாக அன்றிருந்த மகிந்த ராஜபக்ஷ காலிமுகத்திடலில் அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவரும் சாத்வீகவழி போராட்டத்துக்குப் பதிலளிக்கும் விதத்தில் விசேட கூட்டமொன்றை ஏற்பாடு செய்திருந் தார். இந்தக் கூட்டத்தில் அன்றைய அமைச்ச ரான ஜோனஸ்டன் பெர்னாண்டோவும் உரையாற்றியிருந்தார். இவர்களிருவரினதும் உரைகள் இன்றைய பொருளாதார நெருக்கடி தொடர்பாக அரசின் நிலைப்பாட்டை எடுத் துக் கூறுவதற்குப் பதிலாக மறைமுகமாக வன் முறையைத் தூண்டும் விதத்திலேயே அமைந்திருந்தன.*

*இதில் வேடிக்கையான விடயமென்ன வெனில் மே 9ஆம் திகதி அலரி மாளிகையில் மகிந்த ராஜபக்ஷவும் ஜோன்ஸ்டன் பெர் னாண்டோவும் வெளிமாவட்டங்களிலிருந்து கொண்டுவரப்பட்டவர்களுக்கே உரை நிகழ்த்தியதன் மூலம் வன்முறையாளர்கள் வெளியிடங்களிலிருந்து கொண்டுவரப்பட்டி ருந்தமையை அறிய முடிந்திருந்தது.*

*நாட்டுமக்களுக்கு உரை நிகழ்த்துவதாயின் தொலைக்காட்சி அல்லது வானொலி மூல மாக உரை நிகழ்த்தியிருக்கலாம். அல்லது கொழும்பிலிருப்போர் மத்தியில் உரை நிகழ்த் தப்பட்டிருக்கும் பட்சத்தில் அந்த உரை நாட ளாவிய ரீதியில் கூட சென்றடைந்தி ருக்கும். ஆனால், அவ்வாறில்லாமல் வெளியிடங்களி லிருந்து கொழும்புக்கே பரிச்சய மில்லா தோரை அலரி மாளிகைக்கு கொண்டு வந்து அங்கே அவர்கள் மத்தியில் மகிந்த ராஜபக்ஷ வும் , ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும் உரையாற்றியுள்ளமை நன்கு திட்டமிடப்பட்ட முறையில் வன்முறைக்கு தூபமிடப்பட்டுள்ள மையை எடுத்துக்காட்டுவதாகவே அமைந்துள்ளது.*

*வெளியிடங்களிலிருந்து வன்முறைக்கென ஆட்கள் திரட்டப்பட்டு, கொண்டுவரப்பட்ட வர்களில் களுத்துறை சிறைக் கைதிகள் சிலரும் அடங்கியிருந்தனர். தாம் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டு வன்முறைகளில் ஈடுபடுத் தப்பட்டமையை சிறைக் கைதிகளே ஒப்புக் கொண்டுள்ளனர்.*

*எனவே, நன்கு சேகரிக்கப்பட்ட தகவல்க ளின் அடிப்படையிலேயே மகிந்த ராஜபக்ஷ அவருக்கு முன்பதாக முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உட்பட வேறு சிலரிடமும் குற்றப்புலனாய்வுத்துறை பொலி ஸார் விசாரணைகளை நடத்தியிருந்தனர்.*

*கொழும்பு நீதிவான் நீதிமன்றம் ஏற்கனவே மகிந்த ராஜபக்ஷ வெளிநாடு செல்லத் தடை விதித்துள்ளது.*

*கடந்த மே மாதம் 9ஆம் திகதி இடம் பெற்ற வன்முறைகள் தொடர்பாக பாராளு மன்ற உறுப்பினர்கள் சனத் நிஷாந்த , மிலான் ஜயதிலக்க ஆகியோர் உட்பட ஆறு பேர் கோட்டை நீதிவான் நீதிமன்ற நீதிவானின் உத்தரவின்பேரில் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.*

*இதனைத் தொடர்ந்தே குற்றப்புலனாய்வுப் பொலிஸார் மேற்கொண்டுவரும் புலன் விசாரணைகளின் தொடர்ச்சியாகவே தற்சம யம் மகிந்த ராஜபக்ஷவும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.*

*மே 9ஆம் திகதி சம்பவத்தைப் பொறுத்த வரை ஒளிவு - மறைவுக்கு இடமில்லை யென்றே குறப்பிடமுடியும். அன்றைய தினம் சாத்வீகத்துக்கு எதிராக அராஜகம் எவ்வாறு வெளிப்பட்டிருந்தது என்பதை தெட்டத் தெளிவாகவே அறிந்து கொள்ளமுடியும்.*

*வன்முறையாளர்கள் அலரி மாளிகையிலி ருந்தே வெளிப்பட்டிருந்தனர். அத்துடன், அவர்கள் கைகளில் தடிகள், பொல்லுகள் போன்ற ஆயுதங்களையும் வைத்திருந்தனர்.*

*சாத்வீக ஆர்ப்பாட்டக்காரர்களால் காலி முகத்திடலில் உருவாக்கப்பட்டுள்ள 'கோட்டா கோ கம' போராட்ட கிராமத்தை அடித்து நொறுக்குவோம் என்று கூறிக் கொண்டே வன்முறைக்கும்பல் காலிமுகத்தி டல் நோக்கி நகர்ந்து வந்தது. ஆனால், காலிமுகத்திடலில் இருந்தவர்கள் உஷார டைந்ததையடுத்து அவர்களைத் தாக்கவந் தோர் நலிவடைய ஆரம்பித்ததோடு பதில் தாக்குதல்களுக்கும் உள்ளாகியிருந்தனர்.*


*இதனையடுத்தே அரச தரப்பினர் நன்கு திட்டமிட்ட முறையில் தாக்குதலை முன்னெ டுத்தமை வெளிச்சத்துக்கு வந்தது. இதை யடுத்து நாடளாவிய ரீதியில் அரச தரப்பின ரின் உடைமைகள், சொத்துகள் என்பவை சேதப்படுத்தப்பட்டன.*

*மே-9ஆம் திகதி கொழும்பில் குறிப்பாக நாட்டின் கௌரவத்துக்குரிய வாசஸ்தலமான அலரி மாளிகையே காடையர் கும்பலின் ஒன்றுகூடலுக்குரிய இடமாக மாறி வன்முறை கள் அங்கிருந்து பிரவாகமெடுத்ததையடுத்தே முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.*

*வன்முறைகள் பூதாகாரமடைந்ததைய டுத்து திருகோணமலைக்குச் சென்று பதுங்கி யிருந்த மகிந்த ராஜபக்ஷ கொழும்பு திரும்பி தற்போது ஓர் இரகசிய மறைவிடமொன்றில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இருந்து வருகின்றார். அந்த இடத்திலேயே குற்றப்புல னாய்வுப் பொலிஸார் அவரை விசாரணை செய்துள்ளனர்.*

*நேர்மையாக வன்முறைகளுக்கு இடமளிக் காதவராக மகிந்த ராஜபக்ஷ இருந்திருப்பா ரேயானால் தற்போது மறைவிடமொன்றில் இருக்கவோ அல்லது குறுகிய தூரங்களுக்கும் ஹெலிகொப்டர்களில் பயணிக்க வேண்டிய அவசியம் இருந்திருக்கமாட்டாது. எனவே மகிந்த ராஜபக்ஷவும் அவரது சகாக்களும் மே-9 ஆம் திகதி வன்முறைகளுக்கு பொறுப்பாளிகள் என்பது பெரிதும் நிரூபண மாகியுள்ள நிலையில் சட்டம் தடம்புரளாது தனது கடமையைச் செய்யவேண்டியதே அவசியமானதாகின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






### மேடம்

ஈடுபடும் செயலில் இன்று வெற்றி உண்டாகும். மனக்குழப்பம் ஏற்பட்டு விலகும். குடும்பத்தில் நெருக்கடி மறையும்.மனதில் இருந்த பிரச்னை விலகும். எதிர்பார்த்த விஷயம் நிறைவேறும்.

### இடபம்

பேச்சில் கவனம் தேவை. எதிர்பாராத செலவு வரலாம். குடும்பத்தினரால் நெருக்கடிக்கு ஆளாவீர்கள். அலுவலகத்தில் செல்வாக்கு உயரும். இழுபறியாக இருந்த பிரச்னை முடிவிற்கு வரும்.

### மிதுனம்

பிறரால் செய்ய முடியாத ஒரு செயலை செய்து முடிப்பீர்கள். நீண்ட நாள் விருப்பம் நிறைவேறும். நட்புகளால் ஆதாயம் அடைவீர்கள். செயலில் வெற்றி அடைவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

### கடகம்

முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். எதிர்பாராத வருமானம் கிடைக்கும்.தொழிலில் இருந்த சிக்கலை சரிசெய்வீர்கள். செல்வாக்கு உயரும்.வேலை தேடுபவர்களுக்கு நல்ல தகவல் வரும்.

### சிம்மம்

செயல்களில் இழுபறி ஏற்படும். எதிரியால் பிரச்னை உருவாகலாம்.உடலில் அதிருப்தி ஏற்பட்டு விலகும். திட்டமிட்ட பணியில் வெற்றி அடைவீர்கள். உறவினர் உதவுவர்.முயற்சியில் இழுபறி உண்டாகும்.

### கன்னி

முயற்சியில் தடை குறுக்கிட்டு விலகும்.எதிர்பாராத பிரச்னையை சந்திப்பீர்கள். பண விஷயத்தில் கவனம் தேவை. யோசித்து செயல்படுங்கள்.பண வரவில் தடைகளை சந்திப்பீர்கள்.

### துலாம்

செயல்களில் இருந்த தடை விலகும். பெரியோர் ஆதரவால் விருப்பம் நிறைவேறும்.நண்பர் உதவியால் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். எதிர்பார்த்த வரவால் மனம் மகிழும். நட்பில் விரிசல் சீராகும்.

### விருட்சிகம்

எதிரி பிரச்னைக்கு முடிவு கட்டுவீர்கள். பிள்ளைகளின் எதிர்காலத்திற்குரிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.எதிரி தொல்லைக்கு முடிவு கட்டுவீர்கள். செயல்களில் வேகம் அதிகரிக்கும்.

### தனுசு

செயல்களில் கவனம் தேவை. பணி புரியும் இடத்தில் தடைகளை சந்திக்கலாம். கவனமுடன் செயல்பட வேண்டிய நாள்.செயல்களில் ஏமாற்றத்தை சந்திக்க நேரும். ஆன்மிகச் சிந்தனை உண்டாகும்.

### மகரம்

அரசு தொடர்பான விஷயத்தில் கவனம் தேவை. எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் ஏற்படும். அலைச்சல் கூடும்.உடல்நலனில் கவனம் தேவை. உறவுகளால் நெருக்கடிக்கு ஆளாகலாம்.

### கும்பம்

முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். அந்நியர்களால் ஆதாயம் உண்டாகும்.யோசித்து செயல்பட்டு முக்கிய செயலில் வெற்றி அடைவீர்கள். நெருக்கடி விலகும் நாள்.சூழ்நிலை இன்று சாதகமாகும்.

### மீனம்

வீண் செலவால் நெருக்கடியை சந்திப்பீர்கள். பணம் பல வழிகளிலும் செலவாகலாம்.பேச்சால் பிரச்னைக்கு ஆளாகலாம். செலவு குறித்த கவலை உண்டாகும். பணத்தில் கவனம் தேவை.நெருக்கடியை சந்திப்பீர்கள்.

*திருச்சி சிறப்பு முகாமில்*

# உண்ணாவிரதமிருக்கும் 6 ஈழத் தமிழர்கள் மயக்கம்!

*திருச்சி, மே 28*




திருச்சி சிறப்பு தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப் பட்டுள்ள ஈழத்தமிழ் அகதிகள் மேற்கொண்டு வரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட் டிருந்த 6 பேர் மயக்கம டைந்த நிலையில் திருச்சி பொலிஸாரால் நோயாளர் காவு வண்டி மூலம் திருச்சி அரசினர் வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், உண்ணாவிரதத்தில் ஈடுபட் டுள்ள ஏனையவர்கள் தொடர்ந்தும் தமது உண்ணாவிரத போராட்டத்தை கைவிடாமல் தொடர்ந்து வருகின்றனர்.

இதேவேளை, போராட்டக்காரர்கள் தமிழக முதல்வரிடம் பகிரங்க கோரிக்கை ஒன்றையும் முன்வைத்துள்ளனர். அதில்,

"மதிப்புக்குரிய முதலமைச்சர் ஐயா அவர் களே..., எங்கள் இரத்த உறவுகளான எங்கள் தமிழ் மக்கள்... தொடர்ந்து 7ஆவது நாளாக எங்கள் சகோதரர்கள் உண்ணாநிலை போராட்டத்தில் தங்கள் வாழ்க்கைக்கான விடுதலையை நோக்கி காத்து இருக்கிறார்கள்.

சுட்டெரிக்கும் வெயிலில் இந்த கொட்டகை யின் கீழ் தங்கள் விடுதலைக்காக அவர்கள் காத்தி ருக்கிறார்கள். இவர்களில் பத்து பேரில் ஐவரின் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது.

நாங்கள் எமது சகோதரர்கள் என்று எத்தனை முறை இவர்களை வைத்தியசாலைக்குச் செல்ல அறிவுறுத்தினாலும் தங்களுக்கு விடுதலை கிடைக்கும் வரை நாங்கள் போகமாட்டோம் என்று எங்களுடைய வார்த்தைகளை உதாசீனம் செய்து கொண்டு தொடர்ந்து ஏழு நாட்களாக உண்ணாமல் காத்திருக்கிறார்கள்.

எம் தமிழ் உறவுகளே நாங்கள் உங்களிடம் கேட்பது உங்கள் ஒவ்வொருவரை போல் எங்களுக்கும் குடும்பங்கள், குழந்தைகள் உள்ளனர். இந்த சாதாரண வழக்குகளுக்காக இப்படி பல வருடங்களாக எங்களை அடைத்து வைப்பதன் மூலம் எங்கள் குடும்பங்களை, குழந்தைகளை நாங்கள் இழக்கும் நிலைக்கும் வறுமைக்கும் தள்ளப்படுகிறோம்.

ஐயா முதல்வர் ஐயா அவர்களே, எத்தனையோ தீவிரவாத குற்றங்கள் செய்பவர்களுக்கும் கொலைக் குற்றங்கள் செய்பவர்களுக்கும் பொது மன்னிப்பு - கருணை என்ற அடிப்படையில் விடுதலை செய்யப்படுகிறார்கள். நாங்கள் எங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக வந்து, வீசா வழக்குகளிலும் கடவுச்சீட்டு வழக்குகளிலும் இங்கே பல வருடங்களாக இருக்கிறோம்.

பொதுமன்னிப்பு, கருணை என்னும் அடிப் படையில் எங்கள் வழக்குகளையும் தள்ளுபடி செய்து எங்கள் குடும்பங்களோடு வாழ விடுங்கள் ஐயா. எம் இரத்த உறவுகளே எம் தமிழ் உறவு களே எங்களுக்காக ஒரு முறையை குரல் கொடுங் கள். நாங்களும் உங்களைப் போல் எங்கள் குடும் பங்களோடு சேர்ந்து சந்தோசமாக வாழ்வதற்கு", என்று குறிப்பிட்டுள்ளனர். (ஐ)

# தமிழ் மொழி கலாசாரத்தை பிரபலப்படுத்த நடவடிக்கை!

## பிரதமர் மோடி தமிழகத்தில் உறுதி

*சென்னை, மே 28*

தமிழ் மொழி, கலாச்சாரத்தை மேலும் பிரபலப்படுத்த மத்திய அரசு முழு முயற்சிகளை எடுத்து வருகிறது. எனது தொகுதியில் உள்ள பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் பாரதியார் தமிழ் இருக்கை அமைக்கப்படுவது மகிழ்ச்சி அளிக்கிறது என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி தமிழகத்தில் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தமிழக வந்த அவர் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை தொடக்கி வைத்தார். தனது உரையை அவர், 'வணக்கம்' என்று தமிழில் கூறி ஆரம்பித்தார்.

"தமிழகத்துக்கு மீண்டும் வந்திருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த நிலம் மிகுந்த தனித்து வம் வாய்ந்தது. இங்குள்ள மக்கள், கலாசாரம், மொழி ஆகிய அனைத்தும் மிகச் சிறப்பானவை. மகாகவி பாரதியார் இதை 'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என அழகாக பாடியுள்ளார்.

தமிழ் மொழி நிலையானது. தமிழ் கலாசாரம் உலகளாவியது. சென்னையில் இருந்து கனடா வரை, மதுரை முதல் மலேசியா வரை, நாமக்கல் முதல் நியூயார்க் வரை, சேலம் முதல் தென்னாபிரிக்கா வரை புத்தாண்டு மற்றும் பொங்கல் காலங்கள் மிகுந்த ஆர்வம் நிறைந்ததாக உள்ளது.

தமிழ் மொழி, கலாசாரத்தை மேலும் பிரபலப்படுத்த மத்திய அரசு முழு முயற்சிகளை எடுத்து வருகிறது. எனது தொகுதியில் உள்ள பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் பாரதியார் தமிழ் இருக்கை அமைக்கப்படுவது மகிழ்ச்சி அளிக் கிறது. தேசிய கல்விக் கொள்கையில் இந்திய மொழி களை ஊக்குவிக்க முக்கியத்துவம் அளிக்கப்பட் டுள்ளது. தேசிய கல்விக் கொள்கை மூலம், தொழில்நுட்பம், மருத்துவப் படிப்புகளை உள்ளூர் மொழிகளில் படிக்க முடியும் - என் றார். (ஐ)

# சிலப்பதிகாரம் நூலை வழங்கி மோடியை வரவேற்ற ஸ்டாலின்!

*சென்னை, மே 28*

பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை தொடக்கி வைப்பதற்காக தமிழகம் வந்த இந்திய பிரதமர் மோடியை சிலப்பதிகாரம் நூலை வழங்கி தமிழக முதல்வர் ஸ்டாலின் வரவேற்றார்.

நேற்று முன்தினம் சென்னை விமான நிலை யம் வந்த பிரதமர் மோடியை தமிழக முதல மைச் சர் மு. க. ஸ்டாலின் வரவேற்றிருந்தார். இதன் போது, பிரதமருக்கு ஸ்டாலின், சிலப் பதிகாரம் நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பை வழங்கி வர வேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# உரிய மதிப்பு கிடைக்குமானால் 21ஆவது திருத்தத்துக்கு ஆதரவு

## விமல் வீரவன்ஸ அறிவிப்பு

கொழும்பு, மே 28

**அரசாங்கத்தில் இருந்து விலகி சுயாதீனமாகச் செயற்படும் கட்சிகள் முன்வைக்கும் திருத்தங்களுக்கு உரிய மதிப்பு கிடைக்குமானால் 21ஆவது திருத்தத்துக்கு அந்தக் கட்சிகளின் ஆதரவு கிடைக்கும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.**

அரசியலமைப்பு திருத்த பிரேரணை தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் 9 சுயாதீன கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



21ஆவது திருத்தச் சட்டவரைவை ஆராய்ந்து எமது கருத்துக்களை முன்வைத்துள்ளோம். அதனை ஆதரிக்கும் அனைத்து தரப்பினரின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளின் அடிப்படையில் இறுதி வரைவு தயாரிக்கப்படும் என பிரதமர் குறிப்பிட்டுள்ளார். நாங்கள் முன்வைக்கும் உரிய திருத்தங்கள் உரிய மதிப்பை பெற்றால் 21ஆவது திருத்தத்தை ஆதரிப்பதற்கு எமது கூட்டணி தீர்மானித்துள்ளது- என்றார். (அ)

## எரிபொருள் பவுசர் ஒன்று வீதியில் கவிழ்ந்து விபத்து!

கொழும்பு, மே 28

குருநாகலில் எரிபொருள் பவுசர் ஒன்று வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

கொழும்பில் இருந்து கிண்ணியா நோக்கி எரிபொருளை ஏற்றிக் கொண்டு சென்ற பவுசர் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்து ஏற்படும்போது பவுசரில் 13 200 லீற்றர் பெற்றோல் இருந்துள்ளதுடன் பெருமளவிலான எரிபொருள் இதன் போது கசிந்து வீணாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குருநாகல் தீயணைப்புப் பிரிவினரின் பெரும் முயற்சியின் பின்னர் பவுசர் மீண்டும் வீதிக்கு கொண்டுவரப்பட்டது.

குருநாகல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## வெல்கம எம்.பிமீது தாக்குதல்; இருவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, மே 28

கடந்த 9ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொட்டாவ பிரதேசத்தில் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தவர்கள் மீது கடந்த 9ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட வன்முறைத் தாக்குதலை அடுத்து அரச தரப்பு முக்கியஸ்தர்களின் வீடு, அலுவலகம் மற்றும் தொழில் நிறுவனங்கள் என்பன தாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்ட இருந்தது. அப்போது குமார வெல்கம மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (அ)

## 20,598 மெ.தொன் டீசல் கையிருப்பில் உள்ளது

கொழும்பு, மே 28

20,598 மெற்றிக் தொன் டீசல், 1,778 மெற்றிக் தொன் சுப்பர் டீசல் தற்போது கையிருப்பில் உள்ளது என வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

42,750 மெற்றிக் தொன் 92 ரக ஒக்ரேன் பெற்றோல், 6,579 மெற்றிக் தொன் 95 ரக ஒக்ரேன் பெற்றோல், 3,104 மெற்றிக்தொன் ஜெட் ஏ1 ரக எரி பொருள் கையிருப்பில் உள்ளதாக அமைச்சர் மேலும் கூறினார்.

கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ள கப்பலில் இருந்து, பெற்றோலை தரையிறக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

## அத்தியாவசிய உணவுப் பொருட்களின் தொகையை கணக்கெடுக்க நடவடிக்கை

கொழும்பு, மே 28

நாட்டின் கையிருப்பில் உள்ள, அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் தொகை குறித்து, கணக்கிடப்பட்டு வருவதாக, சந்தை, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் கணக்கெடுப்பு நிறைவடைந்த பின்னர், நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட வேண்டிய அரிசி உள்ளிட்ட உணவுப் பொருட்களின் தொகை குறித்து தீர்மானிக்கப்படும் என அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், உணவு நெருக்கடிக்கு தயார்ப்படுத்தல் மற்றும் திட்டமிடல் என்பன குறித்து, ஜனாதிபதியுடன் எதிர்வரும் 2ஆம் திகதி விசேட கலந்துரையாடல் நடத்த உள்ளதாகவும் சந்தை, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## முல்லைத்தீவில் 15,857 குடும்பங்களுக்கு தமிழக உதவிப் பொதிகள் வழங்கப்படும்

முல்லைத்தீவு, மே 28

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழக அரசினால் வழங்கப்பட்ட உலருணவுப் பொதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க. விமலநாதன்-

இன்னும் எங்களுக்கு பொதிகள் வந்து சேரவில்லை. அதே போல் பால்மாவை பொறுத்தவரை 3,964 குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு மாத்திரம் வழங்கும் படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கான தெரிவுகள் பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக இடம்பெற்றுக் கொண்டு வருகின்றன.

உண்மையில் 35,000க்கும் அதிகமான குடும்பங்கள் தகுதியானவர்களாக இருக்கின்றன. ஆனால் எங்களுக்கு வழங்கப்பட்டது 15,857. ஆகவே இதற்குள் அவர்களை தெரிவு செய்து வழங்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியிருக்கிறோம்.

அந்த தெரிவு இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. எங்களுக்கு பொருட்கள் வந்து சேரும் பட்சத்தில் அதனை நாங்கள் அவர்களுக்கு உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து கொண்டிருக்கின்றோம்-என்றார். (அ)

## புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களிலிருந்து மின்சார உற்பத்தியை அதிகரிக்கவேண்டும்

### ஜனாதிபதி கோட்டாபய வலியுறுத்து

கொழும்பு, மே 28

தேசிய மின்கட்டமைப்பில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களுக்கு கணிசமான பங்களிப்பை வழங்குவதற்கு உதவுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மின்துறை நிபுணர்களிடம் கேட்டுள்ளார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களை மின் உற்பத்திக்கு பங்களிப்பதில் நிலவும் பிரச்னைகள் குறித்து ஆராய நேற்று முன் தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

மொத்த மின் தேவையில் 70 சதவீத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களில் இருந்து உற்பத்தி செய்வது அரசாங்கத்தின் இலக்கு ஆகும்.

இதுவரை சூரிய சக்தியில் இருந்து கிட்டத்தட்ட 700 மெகாவொட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறன் உள்ளது.

ஆனால், இலங்கை மின்சார சபை பொறியாளர்களின் எதிர்ப்பினால் அது சாத்தியமாக வில்லை என்பது பொதுமக்களின் கருத்து ஆகும்.



அதனை சரிசெய்து நிலவும் மின்சார நெருக்கடிக்கு தீர்வு காண நடைமுறை ரீதியாக உதவ முடியும் என ஜனாதிபதி தெரிவித்தார். (அ)

## வவுனியா இலுப்பையடியில் புதிதாக குடியமர்ந்த புத்தர்!

வவுனியா, மே 28

வவுனியா நகரில் உள்ள இலுப்பையடிப் பகுதியில் புத்தர் சிலை ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, இலுப்பையடிப் பகுதியானது தமிழ் பேசும் மக்கள் அதிகமாக வாழும் பகுதியாகவுள்ளதுடன், தமிழ் பேசும் மக்களின் வர்த்தக நிலையங்களும் அதிகமாகவுள்ளன.

இப் பகுதியில் மரம் ஒன்றின் கீழ் பிள்ளையார் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டு பல வருடங்களாக அப் பகுதி வர்த்தகர்களும், வீதியால் செல்வோரும் வழிபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இலுப்பையடிப் பகுதியில் அமைந்துள்ள வன்னி பௌத்த இளைஞர் சங்க அலுவலகத்திற்கு முன் பாக வீதியில் செல்வோர் தரிசிக்கும் வகையில் புதிதாக பீடம் நிறுவப்பட்டு புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டு, மின்சாரமும் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த புத்தர் சிலை உள்ள பகுதியில் இருந்து 50 மீற்றர் தூரத்தில் தொல்பொருள் திணைக்கள பிராந்திய காரியாலயத்தில் வீதியில் செல்வோர் காணக் கூடியதாக ஏற்கனவே புத்தர் சிலை உள்ள நிலையில் தற்போது புதிதாக புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளமை பௌத்த



மயமாக்கலின் ஒரு பகுதியா என பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அத்துடன், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வவுனியா-மன்னார் வீதியில் இயங்கி வரும் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலக வளாகத்திலும் புத்தர்சிலை ஒன்று வைக்கப்பட்டு பிரித்தோதுதல் இடம் பெற்றிருந்தது.

மேலும், இலுப்பையடிப் பகுதியில் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ள இடத்திற்கு முன் பாக உள்ள பிள்ளையார் ஆலயத்தில் காணப்பட்ட பிள்ளையார் சிலை ஜனவரி 23 ஆம் திகதி காணமல் போயிருந்த நிலையில் மீள பிரதிஷ்டை செய்யப்பட்டு மக்களாலும், வர்த்தகர்களாலும் வழிபடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஐ.தே.கவில் இணைய ஹரின், மனுச திட்டம்!

## ஐக்கிய மக்கள் சக்திக்குள் உட்கட்சி மோதல் உக்கிரம்



கொழும்பு, மே. 28

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்குள் உட்கட்சி மோதல் உக்கிரமடைய ஆரம்பித்துள்ளது.

பிரதமர் பதவியை சஜித் பிரேமதாஸ ஏற்காததால் அதிருப்தியடைந்த ஹரின் பெர்ணான்டோ, மனுச நாணயக்கார ஆகியோர் கட்சியிலிருந்து விலகி, அரசுடன் இணைந்து அமைச்சு பதவியை ஏற்றுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி ஊடாக, எதிர்கால அரசியல் பயணத்தை தொடரவும் திட்டமிட்டுள்ளனர்.

கரு ஜயசூரியவை தேசியப்பட்டியல் எம்.பியாக்கி, அவருக்கு பிரதமர் பதவியை வழங்கலாம் என கபீர் ஹாசீம் உள்ளிட்ட சில உறுப்பினர்கள் யோசனை முன்வைத்துள்ளனர். இதற்காக தனது தேசியப்பட்டியல் எம்.பி. பதவியை விட்டுக்கெடுக்க ,மயந்த திஸாநாயக்க தயாராகவே இருந்துள்ளார். இந்த முயற்சி வெற்றியளிக்காததால் கபீர் ஹாசீம் உள்ளிட்ட தரப்பும் மனமுடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது.

சரத் பொன்சேகா, ராஜித சேனாரத்ன போன்றவர்கள் சஜித்தை தவறாக வழிநடத்துகின்றனர் என மேலும் சில உறுப்பினர்கள், தமது சகாக்களிடம் உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்தியுள்ளனர். (அ)

# திங்கள்கிழமை முதல் எரிவாயு விநியோகம்

கொழும்பு, மே. 28

கடந்த 3 நாட்களாக லிட்ரோ நிறுவனத்தினால் எரிவாயு விநியோகம் இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையிலும் பொது மக்கள் எரிவாயு கொள்கலன்களை பெற்றுக்கொள்வதற்காக நீண்ட வரிசைகளில் காத்திருந்தாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் இலங்கையை வந்தடையவிருந்த 3,500 மெற்றிக் தொன் எரிவாயு தாங்கிய கப்பல், நாட்டுக்கு வருவதற்கு மேலும் தாமதமாகும் என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

குறித்த கப்பலுக்கு இலங்கையில் எரிபொருளை வழங்க முடியாமையால், எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக அந்தக் கப்பல் இந்தியாவுக்கு சென்றுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்த எரிவாயு கப்பல் நாளை ஞாயிற்றுக்கிழமை இலங்கையை வந்தடையும் என லிட்ரோ நிறுவனத் தலைவர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இதற்கமைய, எதிர்வரும் திங்கட்கிழமை முதல், எரிவாயு விநியோகத்தை முன்னெடுக்கக்கூடியதாக இருக்கும்.

எனவே, 3 நாட்களுக்கு எரிவாயுவைப் பெற்றுக்கொள்ள வரிசைகளில் காத்திருக்க வேண்டாம் என லிட்ரோ நிறுவனம் பொதுமக்களைக் கோரியுள்ளது. (அ)

# முத்துஜயன்கட்டு பாடசாலை அதிபர் விபத்தில் சிக்கிப் பலி!

யாழ்ப்பாணம், மே. 28

சாவகச்சேரிப் பகுதியில் டிப்பர் வாகனம் மோதியதில் படுகாயம் அடைந்த முல்லைத்தீவு முத்துஜயன்கட்டு வலது கரை முத்துவிநாயகர் தமிழ் கலவன் பாடசாலையின் அதிபர் கந்தையா சத்தியசீலன் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

ஏ - 09 நெடுஞ்சாலையில் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு முன்பாக மோட்டார் சைக்கிளை டிப்பர் வாகனம் மோதித் தள்ளியதால் விபத்து நிகழ்ந்திருந்தது.

சம்பவத்தில் படுகாயம் அடைந்தவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் அவர் உயிரிழந்தார் என தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த கந்தையா சத்தியசீலன் என்றும் அவர் முல்லைத்தீவு முத்தையன்கட்டு வலது கரை முத்துவிநாயகர் தமிழ் கலவன் பாடசாலையின் அதிபர் என்றும் தெரியவந்தது. (அ)

# நாட்டு மக்களின் கோரிக்கைகளுக்கு ஆட்சியாளர் செவிமடுக்கவேண்டும்!

## பதுளை சர்வமத தலைவர்கள் கோரிக்கை

கொழும்பு, மே. 28

இன, மத, கட்சிப் பேதமின்றி இளைஞர்கள் ஒன்றிணைந்து போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். எனவே போராட்டங்களில் அவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு ஆட்சியாளர்கள் செவிமடுக்க வேண்டுமென பதுளை சர்வமதத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

பதுளை மாவட்ட சர்வமதக் குழுவினரின் கூட்டம் நேற்று முன் தினம் பதுளை 'ரிவர் சைட்' கிரான்ட் விடுதியில் நடைபெற்றபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்-

நாட்டில் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு, விலைவாசி உயர்வு, பொருளாதார நெருக்கடி, எரிபொருள் விலையேற்றம், எங்கு பார்த்தாலும் வரிசைகள் என்று நாட்டு மக்கள் சொல்லொண்ணாத் துயரங்களை எதிர்நோக்கியுள்ளனர். நாடும் வங்குரோத்து நிலையினை அடைந்துவிட்டது. மக்கள் தத்தமது வாழ்வாதாரங்களை முன்னெடுக்க முடியாத இக்கட்டான சூழல் காணப்படுகின்றது.

நாட்டு அரசில் கூடுதலான அதிகாரங்கள் ஒரே இடத்தில் குவிக்கப்பட்டிருக்கின்றமை யினால், எவரின் குரலுக்கும் செவிமடுக்காமல் தன்னிச்சையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இதுவே, நாட்டில் ஏற்பட்டிருக்கும் பாரிய நெருக்கடி நிலைக்கு மூலக் காரணமாகும். அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்க வேண்டியது முக்கியமாகும். இன்னும் ஓரிரு மாதங்களில் நாட்டு மக்களினது உணவிற்கும் வழியின்றி, பஞ்சம் தலைவிரித்தாடப் போகின்றது.

எமது நாட்டில் இன, மத, கட்சிப் பேதங்களுக்கப்பால் இளைஞர் சமூகத்தினர் ஓரணியில் திரண்டு செயற்படுகின்றனர். இத்தகைய நிலை நாட்டில் ஸ்திரமானதோர், ஆரோக்கியமுள்ள சமூகத்தைக் கட்டியெழுப்பக் கூடியதாக விருக்கின்றது. இவ்விடயத்தில் மகிழ்ச்சியடைய வேண்டியுள்ளது.

இன ஒன்றிணைவு, கலை, கலாசார ஒன்றிணைவு, மதங்களுக்கான ஒன்றிணைவு, சமத்துவம், சகோதரத்துவம் பல்லின இளைஞர் சமூகத்தினர் மத்தியில் காணப்படுகின்றன. இதுவே இந்நாட்டிற்குத் தேவை. இத்தகைய கோட்பாடுகளை முன்னிலைப்படுத்தி, இளைஞர் சமூகத்தினர் முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு ஆட்சியாளர்கள் செவிமடுக்க வேண்டும். அடம்பிடிப்பதில் பயன் ஏதும் கிடைக்கப் போவதில்லை - என்றனர். (அ)

# அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு; செய்தியை மறுக்கும் பிரதமர் அலுவலகம்

கொழும்பு, மே. 28

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது குறித்து பிரதமர் ரணில் விக்ரமசிங்க எந்த முடிவும் எடுக்கவில்லை என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு குறித்து ஊடகங்களில் வெளியான செய்திகளை பிரத மர் அலுவலகம் மறுத்துள்ளது.

எதிர்வரும் இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தில் சுகாதாரம் மற்றும் கல்வி அமைச்சு தவிர்ந்த ஏனைய அமைச்சுக்களின் ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டு நிவாரணம் வழங்கப்படும் என்றும் பிரதமர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# பாடசாலை மாணவர்களுக்கு மீண்டும் மதிய உணவு வழங்கல்

கொழும்பு, மே. 28

பாடசாலை மாணவர்களுக்கு மீண்டும் மதிய உணவை வழங்குவது தொடர்பில் கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

பெற்றோர்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட வேண்டும் என்று தானும் உறுதியாக இருப்பதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கல்வித்துறையில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்னைகளுக்கு, முறையான நடைமுறைகள் இன்மையே முக்கிய காரணம் ஆகும்.

கல்வித்துறையில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் எதிர்வரும் டிசம்பர் மாதத்திற் குள் தீர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் கல்வி அமைச்சர் மேலும் கூறினார். (அ)





# கோழி முட்டை பயன்பாடு 80 வீதமாக குறைந்துள்ளது

*கிராமங்களில் கோழிப் பண்ணைகள் மூடல்*

கொழும்பு, மே 28

நாட்டில் மக்கள் கோழி முட்டைகளை பயன்படுத்துவது 80 வீதமாக குறைந்துள்ளதாக அகில இலங்கை கோழி முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை சந்தையில் தற்போது ஒரு கோழி முட்டை 30 ரூபாவுக்கும் மேல் விற்பனை செய்யப்படுகிறது.

அத்துடன் கிராம மட்டத்தில் இயங்கி வந்த கோழிப் பண்ணைகளில் 80 வீதமான பண்ணைகள் முற்றாக மூடப்பட்டுள்ளன. மிகப் பெரிய கோழிப் பண் ணைகளில் 50 வீதமானவை மாத்திரம் தற்போது இயங்கி வருகின்றன.

அதேவேளை முட்டை உற்பத்திக்கான செலவு 35 வீதமாக அதிகரித்துள்ளது.

கோழிப் பண்ணை தொழிலுக்கு தேவையான பொருட்களின் விலைகள் பெருமளவில் அதிகரித்துள்ளதால், கிராமங்களில் கிராமிய கைத் தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வந்த கோழிப் பண்ணை தொழிலுக்கு கடும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

இதன் காரணமாக பாரம்பரியமாக கோழிப் பண்ணைகளை நடத்தி வந்த பலர், அதனை கைவிட்டு, கயிறு தயாரிப்பு போன்ற வேறு துறைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி உட்பட நெருக்கடிகளுக்கு தீர்வு கிடைக்கும் வரை கோழி முட்டைகளின் விலைகள் மேலும் அதிகரிக்கும் நிலைமை காணப்படுகின்றது-என்றார். (அ)

# ரணிலின் முதல் பலி மத்திய வங்கி ஆளுநர்

*நளின் பண்டார தகவல்*

கொழும்பு, மே 28

புதிய நிதியமைச்சர் ரணில் விக்ரமசிங்கவின் முதல் பலி தற்போதைய மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவே என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

ரணில் விக்ரமசிங்க பிரதமராக பதவியேற்றதன் பின்னர் பொருளாதார நெருக்கடி தொடர்பில் மத்திய வங்கி ஆளுநருடன் ஒருபோதும் கலந்துரையாடவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசிய அவர்-

ரணில் விக்ரமசிங்க பிரதமராக பதவியேற்று 10 நாட்களுக்கு மேல் ஆகிவிட்டது. இந்தக் காலப்பகுதியில் மத்திய வங்கி ஆளுநரை பிரதமர் எப்போதாவது சந்தித்தாரா? என்பது எமக்கு தெரியாது.

மத்திய வங்கியின் ஆளுநருக்கும் ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையில் பாரிய முரண்பாடு காணப்படுகின்றமை எமக்குத் தெரியும்.

2015 இற்கு பிறகு நடந்த சம்பவங்களுடன் தொடர்புடையதாக பல தகவல்கள் உள்ளன.

ஏனெனில் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க பிணைமுறி கொடுக்கல் வாங்கலின் போது பிரதி ஆளுநராக இருந்தார். பிணை முறி ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்தவர்களில் கலாநிதி நந்தலாலும் ஒருவர்.



அதனால்தான் கடந்த இரண்டு வாரங்களாக ரணில் விக்ரமசிங்க மத்திய வங்கியுடன் இணைந்து பணியாற்றவில்லையா? இன்று நிதியமைச்சராகப் பதவியேற்றுள்ள ரணில் விக்ரமசிங்கவின் மத்திய வங்கியின் கொள்கைகள் என்ன? கலாநிதி நந்தலால் வீரசிங்கவை எவ்வாறு கையாள்வது? தற்போதைய நிதி அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவின் முதல் பலியாக நந்தலால் வீரசிங்க இருப்பாரா என்ற கேள்வி எம் உள்ளங்களில் கேள்விக்குறியாக உள்ளது.

மத்திய வங்கி போன்ற ஒரு நிறுவனம் அரசியலில் இருந்து விடுபட்ட சுதந்திரமான நிறுவனமாக இருக்க வேண்டும் என்பதை நாங்கள் மரியாதையுடனும் பொறுப்புடனும் கூறுகிறோம்-என்றார். (அ)

# வாயினால் வடை சுடுகிறார் ரணில்

*நளிந்த ஜயதிஸ்ஸ கூறுகிறார்*

**கொழும்பு, மே 28**

**ரணில் விக்ரமசிங்கவின் பொருளாதார கொள்கை என்பது வாயால் வடை சுடும் பொருளாதார கொள்கை எனவும் அந்த பொருளாதர கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் தற்போது இலங்கை ஜப்பானாக மாறி இருக்கவேண்டும் எனவும் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

இந்த உண்மையை மக்கள் புரிந்துக்கொள்ள வேண்டும் எனவும் பணத்தை அச்சிடவும், கடனை பெறவும் இருப்பவற்றை விற்பனை செய்வதற்கும் ரணில் விக்ரமசிங்க எதற்கு எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுனவின் அரசாங்கத்தின் புதிய நிதிய மைச்சராக ரணில் விக்ரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். சில சம்பவங்கள் நடந்தால், நாம் அவற்றை தலையெழுத்து என்று சொல்வோம்.

2015 ஆம் ஆண்டில் இருந்து சில காலம் ரவி கருணாநாயக்க நிதியமைச்சராக இருந்தாலும் இலங்கை மத்திய வங்கி ரணில் விக்ரமசிங்கவின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இருந்தது.

ரணில் நாட்டின் வளங்களை விற்பனை செய்தார். அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்றார். ஸ்ரீலங்கன் விமான சேவையை விற்பனை செய்ய



முயற்சித்தார்.

கொழும்பு நகரில் உள்ள பெறுமதியான காணிகளை விற்பனை செய்யத் திட்டமிட்டார். கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விற்பனை செய்யத் திட்டமிட்டார்.

பல பொருளாதார மாநாடுகளுக்கு சென்று ரணில் உரையாற்றி இருந்தாலும் நாட்டுக்கு முதலீடுகள் வரவில்லை.

இதனால், அந்த காலத்தில் வளங்களை விற்பனை செய்வதே தீர்வாக இருந்தது.

மீதம் இருக்கும் தண்ணீர், மின்சாரம், வங்கி, ரயிவே திணைக்களம் ஆகியவற்றை விற்பனை செய்வது பற்றியும் அப்போது பேசப்பட்டது. அப்போது, தற்பொழுது அச்சிடுவது போல் பணம் அச்சிடப்படவில்லை.

ரணில் தனது கொள்கையை அப்படியே முன்னெடுத்துச் செல்கிறார்.

எம்.சீ.சீ.உடன்படிக்கை மூலம் 450 மில்லியன் டொலர்கள் கிடைக்கும் என ரணில் கூறினார்.

அதனை எதிர்த்து அதற்கு எதிராக நிலைப்பாடுகளை உருவாக்கி, ராஜபக்ஷவினர் ஆட்சி அதிகாரத்தை கைப் பற்றினர்.

இந்த நிலையில் ரணில் விக்ரமசிங்கவின் ஊடாக ராஜ பக்ஷவினர் தமக்கு தேவை யானதை செய்து வருகின்றனர்.

அன்று வளங்கள் விற்பனை செய்வதற்கு எதிராக பேரணிகளை நடத்தியவர்கள், ரணில் தற்போது நாட்டின் வளங்களை விற்பனை செய்யும் போது கைகளை உயர்த்துகின்றனர். அன்று ரணிலின் தேசிய கொள்கைகளை எதிர்த்தவர்கள், தற்போது அவரது பொரு ளாதார கொள்கைகளை தலையில் சுமந்து செல்கின்றனர்-என்றார். (அ)

# போக்குவரத்து நெரிசல் காரணமாக தினமும் 500 மில்லியன் ரூபா நட்டம்!

கொழும்பு, மே 28

கொழும்பில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் காரணமாக நாளாந்தம் 400 முதல் 500 மில்லியன் ரூபாய் வரை நாட்டுக்கு நட்டம் ஏற்படுவதாக தெரியவந்துள்ளது.

மொறட்டுவை பல்கலைக் கழகத்தின் போக்குவரத்து மற்றும் விநியோக முகாமைத்துவ பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர் அமல் குமாரகே இதனை தெரிவித்தார்.

போக்குவரத்து நெரிசல் காரணமாக எரிபொருள் விரயம், மற்றும் உழைக்கும் மக்கள் வேலை செய்யும் வீதிகளை மறிப்பதானது ஒரு நாடு என்ற ரீதியில் தாங்க முடியாத பொருளாதார இழப்பாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வாகனங்கள் பாராளுமன்ற வீதி, கண்டி வீதி, காலி வீதி, ஹைலெவல் வீதி, ஹொரண வீதி, தெமட்டகொடை - வெல்லம்பிட்டி வீதி, நாவல - நாரஹேன்பிட்டி வீதி, ஒருகொடவத்தை - அம்பத்தளை வீதி, கீரிமண்டல மாவத்தை, ஹெக்கிட்டா - மட்டக்குளி வீதி, லோ லெவல் ஆகியவற்றின் ஊடாக கொழும்பு நகருக்குள் பிரவேசிக்கின்றன.

இவற்றில் பெரும்பாலான வாகனங்கள் காலி வீதி, கண்டி வீதி, நீர்கொழும்பு வீதி மற்றும் ஹைலெவல் வீதி வழியாக கொழும்புக்குள் பிரவேசிக்கின்றன.

மோட்டார் சைக்கிள்கள் உட்பட சுமார் 9 இலட்சம் வாகனங்கள் இந்த வீதிகள் ஊடாக நாளாந்தம் கொழும்புக்குள் பிரவேசிப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இதில் 3 இலட்சத்து 14 ஆயிரத்து 231 கார்கள் மற்றும் ஜீப்புகள், 2 இலட்சத்து 40 ஆயிரத்து 756 முச்சக்கர வண்டிகள், 2 இலட்சத்து 11 ஆயிரத்து 320 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 28 ஆயிரத்து 989 வான்களும் உள்ளடங்குகின்றன.

நாளாந்தம் கொழும்புக்குள் நுழையும் பேருந்துகளின் எண்ணிக்கை 26 ஆயிரத்து 634 ஆகவும் பதிவாகுகின்றன.

நாளாந்தம் கொழும்பு நகருக்குள் இவ்வளவு வாகனங்கள் பிரவேசித்தாலும் அங்கு வரும் மக்களின் எண்ணிக்கை 1.9 மில்லியனை அண்மித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதன்படி, இருவர் பயணிக்கும் வகையில் ஒரு வாகனம் கொழும்பிற்குள் நுழைவதே போக்குவரத்து நெரிசலுக்கு முக்கிய காரணம் என்பது தெளிவாகிறது. (அ)

# சீனா - தாய்வான் பிரச்னை வரலாறு என்ன?




தாய்வானை பாதுகாக்க ராணுவ பலத்தைப் பயன்படுத்தத் தயாராக இருப்பதாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கூறியுள்ளார். ஆனால், அமெரிக்காவின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லையென்று வெள்ளை மாளிகை அதிகாரிகள் வலியுறுத்துகின்றனர்.

தாய்வான் மீது சீனா தாக்குதல் நடத்தினால், அமெரிக்கா ராணுவரீதியாகத் தலையிடுமா என்பது குறித்து அமெரிக்க அரசு நீண்டகாலமாக உத்திசார்ந்த குழப்பமான கொள்கையையே கொண்டுள்ளது.

சீனாவின் அதிபர் ஷி ஜின் பிங், “தாய்வானுடனான “மறு ஒருங்கிணைப்பு” நிறைவேற்றப்பட வேண்டும்” என்கிறார். மேலும், இதைச் சாத்தியப்படுத்த ராணுவ பலத்தைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை அவர் நிராகரிக்கவில்லை.

தன்னாட்சி செய்துகொள்ளும் தாய்வானை, காலப்போக்கில் மீண்டும் அதோடு இணையக்கூடிய, சீனாவின் ஒரு பகுதியாக மாறக்கூடிய, பிரிந்துள்ள ஒரு மாகாணமாகத்தான் சீனா பார்க்கிறது.

இருப்பினும், தாய்வான் தனது சொந்த அரசியலமைப்பு மற்றும் ஜனநாயக ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுடன் தன்னை ஒரு சுதந்திர நாடாகப் பார்க்கிறது.

### முதல் தீவு சங்கிலி

தாய்வான், தென்கிழக்கு சீனாவின் கடற்கரையிலிருந்து சுமார் 100 மைல் தொலைவில் அமைந்திருக்கும் ஒரு தீவு.

அமெரிக்க வெளியுறவுக் கொள்கைக்கு முக்கியமான அமெரிக்க நட்பு நாடுகள் பட்டியலான “முதல்தீவு சங்கிலி” (first island chain) என்றழைக்கப்படும் பட்டியலில் தாய்வான் உள்ளது.

சீனா தாய்வானை கைப்பற்றினால், மேற்கு பசிபிக் பிராந்தியத்தில் அதன் அதிகாரத்தைச் சுதந்திரமாகக் காட்ட முடியும் என்றும் குவாம் மற்றும் ஹவாய் வரையிலான அமெரிக்க ராணுவ தளங்களை அது அச்சுறுத்தக் கூடும் என்றும் சில மேற்கத்திய வல்லுநர்கள் கூறுகின்றனர்.

ஆனால், சீனா தனது நோக்கங்கள் முழுவதும் அமைதியானது என்று வலியுறுத்துகிறது.

### தாய்வான் சீனாவில் இருந்து பிரிந்தது ஏன்?

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, சீனாவின் பிரதான நிலப்பகுதியில் தேசியவாத அரசாங்கத்தின் படைகளுக்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையிலான சண்டை நடந்தபோது, சீனா-தாய்வான் பிரிவு ஏற்பட்டது.

கம்யூனிஸ்டுகள் 1949-ஆம் ஆண்டில் வெற்றி பெற்றனர். அவர்களுடைய தலைவரான மாவோ சேதுங் பெய்ஜிங்கில் ஆட்சியைக் கைப்பற்றினார்.

இதற்கிடையே, கோமின்டாங் என்று அறியப்பட்ட தேசியவாதக் கட்சி, தாய்வானுக்கு தப்பி ஓடியது.

தாய்வான் வரலாற்றின் குறிப்பிடத்தக்க காலத்திற்கு ஆட்சி செய்து வரும் கோமின்டாங், தாய்வானின் மிக முக்கியமான அரசியல் கட்சிகளில் ஒன்றாக இருந்து வருகிறது.

இப்போது, தாய்வானை இறையாண்மை கொண்ட நாடாக கத்தோலிக்க கிறிஸ்தவத்தின் தலைமையகமான வாட்டிகனும், வேறு 13 நாடுகளும் அங்கீகரிக்கின்றன.

தாய்வானை அங்கீகரிக்கக் கூடாது அல்லது அங்கீகாரத்தைக் குறிக்கக் கூடிய எதையும் செய்யக் கூடாது என்று சீனா மற்ற நாடுகள் மீது கணிசமான ராஜ்ஜீய ரீதியிலான அழுத்தங்களைச் செலுத்துகிறது.

தாய்வான் பாதுகாப்புத் துறை அமைச்சர், சீனா உடனான தங்களது உறவு கடந்த 40 ஆண்டுகளில் மோசமான நிலையில்




இருப்பதாகக் கூறியுள்ளார்.

## தாய்வானுக்கு அமெரிக்கா ஆதரவளிப்பது ஏன்?

### தாய்வான் தன்னைத் தற்காத்துக் கொள்ள முடியுமா?

பொருளாதார உறவுகளை வலுப்படுத்துதல் போன்ற ராணுவமல்லாத வழிகளில் சீனா மீண்டும் தாய்வானுடன் ஒன்றிணைவதற்கான முயற்சிகளை எடுக்கலாம்.

ஆனால், ராணுவ மோதல் என்று வரும்போது, அது எந்த வகையில் இருந்தாலும், சீனாவின் படைகள் தாய்வான் படைகளை எளிதில் தோற்கடித்து விடும்.

அமெரிக்காவுக்கு அடுத்து மற்ற உலக நாடுகளைவிட அதிகளவில் சீனா பாதுகாப்புத் துறைக்காகச் செலவழிக்கிறது. கடற்படையிலிருந்து ஏவுகணை தொழில்நுட்பம், விமானம், சைபர் தாக்குதல்கள் வரை பெரியளவிலான ஆற்றலைப் பெறுவதற்காக, சீனா செலவு செய்கிறது.

சீனாவுடைய ராணுவ சக்தியின் பெரும்பகுதி வேறு இடங்களில் கவனம் செலுத்துகிறது. ஆனால், ஒட்டுமொத்தமாக செயலிலுள்ள பணியாளர்களைப் பொறுத்தவரை, இரண்டு தரப்புக்கும் இடையே ஒரு பெரிய ஏற்றத்தாழ்வு உள்ளது.

ஒரு வெளிப்படையான மோதலில், தாய்வான் சீனத் தாக்குதலின் வேகத்தைக் குறைப்பது, சீன படைகள் தாய்வானில் கரையிறங்குவதைத் தடுக்க முயல்வது, வெளியிலி ருந்து உதவி கிடைக்கும் வரை காத்திருக்கும்போது கொரில்லா தாக்குதல்களை மேற்கொள்வது ஆகியவற்றைச் செய்ய முடியும் என்று சில மேற்கத்திய வல்லுநர்கள் கணித்துள்ளனர்.

தாய்வானுக்கு ஆயுதங்களை விற்கும் அமெரிக்காவிடம் இருந்து அந்த உதவி வரலாம்.இப்போது வரை, அமெரிக்க அரசின் உத்திசார் தெளிவின்மை கொள்கை, தாக்குதலின்போது தாய்வானை எப்படிப் பாதுகாக்கும் என்பது பற்றி அமெரிக்கா இன்னமும் தெளிவற்று இருப்பதையே காட்டுகிறது.

ராஜ்ஜியரீதியாக, அமெரிக்க தற்போது “ஒற்றை சீனா” கொள்கையைக் கடைபிடிக்கிறது. இது ஒரேயொரு சீன அரசாங்கத்தை அங்கீகரிக்கிறது. தாய்வானை காட்டிலும் சீனாவுடன் முறையான உறவுகளைக் கொண்டுள்ளது.

ஆனால், திங்கள் கிழமையன்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் வாஷிங்டனின் நிலைப்பாட்டைக் கடினமானதாக்கினார். அமெரிக்கா தாய்வானை ராணுவ ரீதியாகப் பாதுகாக்குமா என்ற கேள்விக்கு, பைடன் “ஆம்” என்று பதிலளித்தார்.

தாய்வான் மீதான சீன தாக்குதலுக்கும் யுக்ரேன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கும் இடையே அவர் ஓர் ஒற்றுமையைச் சுட்டினார். “இது பிராந்தியத்தை முற்றிலும் இடம் மாற்றி, யுக்ரேனில் நடந்ததைப் போன்ற மற்றுமொரு செயலாகவே இருக்கும்” என்று குறிப்பிட்டார்.

### நிலைமை மோசமடைகிறதா?

2021-ஆம் ஆண்டில், தாய்வானின் வான் பாதுகாப்பு மண்டலத்திற்கு ராணுவ விமானங்களை அனுப்பியதன் மூலம் சீனா அதன் அழுத்தத்தை அதிகரிக்க முயன்றது.

தாய்வான் 2020-ஆம் ஆண்டில் விமான ஊடுருவல் பற்றிய தரவுகளைப் பொதுவில் வெளியிடத் தொடங்கியது.

அதன்படி, அக்டோபர் 2021-இல், ஒரே நாளில் 56 ஊடுருவல்கள் என்ற அளவில் சீனாவின் ஊடுருவல் எண்ணிக்கை உச்சத்தை எட்டியது.

உலகின் அன்றாட மின்னணு உபகரணங்களான கைபேசிகள், மடிக்கணினிகள், கடிகாரங்கள், கேம் கன்சோல்கள் எனப் பெரும்பாலானவை, தாய்வானில் தயாரிக்கப்பட்ட கணினி சிப்களால் இயக்கப்படுகின்றன.

ஓர் அளவீட்டின்படி, தாய்வான் செமிகண்டக்டர் உற்பத்தி நிறுவனம் அல்லது டிஎஸ்எம்சி என்ற ஒரு தாய்வானிய நிறுவனம், உலக சந்தையில் பாதியைத் தன்னகத்தே வைத்துள்ளது.

டிஎஸ்எம்சி என்பது, வார்ப்பகம் என்றழைக்கப்படும், நுகர்வோர் மற்றும் ராணுவ வாடிக்கையாளர்களால் வடிவமைக்கப்பட்ட சிப்களை உருவாக்கும் நிறுவனம். இந்தத் துறையின் 2021-ஆம் ஆண்டு மதிப்பு கிட்டத்தட்ட 100 பில்லியன் டாலர். தாய்வானில் சீனாவின் கையகப்படுத்தல், உலகின் மிக முக்கியமான தொழில்களில் ஒன்று மீது பெய்ஜிங்கிற்கு கட்டுப்பாட்டைக் கொடுக்கலாம்.


### தாய்வான் மக்கள் இதுகுறித்துக் கவலைப்படுகிறார்களா?

சீனாவுக்கும் தாய்வானுக்கு இடையே சமீபகால பதற்றங் கள் இருந்தபோதிலும், பல தாய்வா னிய மக்கள் ஒப்பீட்டளவில் கவ லையற்று உள்ளதாக ஆராய்ச்சி கூறுகி றது.

அக்டோபரில் தாய்வான் பொதுக் கருத்து அறக்கட்டளை, இறுதியில் சீனாவுடன் போர் நடக்கும் என்று நினைக்கி றீர்களா என மக்களிடையே கேட்டது. அதில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் (64.3 வீதம்) இல்லையென்று பதிலளித்துள்ளனர்.

தாய்வானில் வாழும் பெரும்பாலான மக்கள் தங்களை தாய்வானியர்களாக அடையாளப்படுத்திக் கொள்வதாக மற்றுமொரு ஆராய்ச்சி கூறுகிறது.

1990-களின் முற்பகுதியிலிருந்து தேசிய செங்ச்சி பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட ஆய்வுகள், சீனர்கள் அல்லது சீனர்கள் மற்றும் தாய்வானியர் கள் என அடையாளம் காணும் மக்களின் விகிதம் குறைந்துள்ளது என்றும் பெரும்பாலான மக்கள் தங்களை தாய்வானியர்கள் என்றே கருதுவதாகவும் கூறுகிறது.



# ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்கும் 21வது திருத்த சட்டவரைவு: ஒப்புதல் பெறுமா?

இலங்கை ஜனாதிபதி வசம் காணப்படுகின்ற அதிகாரங்களை வரையறுத்தல், நாடாளுமன்ற பிரவேசத்திற்கு இரட்டை பிரஜாவுரிமையை ரத்து செய்தல் உள்ளிட்ட விடயங்கள் பலவற்றை உள்ளடக்கிய வகையில் கொண்டு வரப்பட்டுள்ள அரசியலமைப்பின் 21வது திருத்த சட்டவரைவை செயல்படுத்த பலர் முயற்சித்து வருகின்றனர்.

அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட சட்ட வரைவை, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்வதற்கு ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணி கட்சிகளின் ஆதரவு கிடைக்குமா என்ற சந்தேகம் தற்போது எழுந்துள்ளது.

இல்லையென்றால், இது காலத்தை கடத்தும் ஒரு முயற்சியாக இருக்குமா?

அரசியலமைப்பின் 21வது திருத்தம் தொடர்பாக விவரிக்கிறது இந்த கட்டுரை.

### சட்டவரைவு அமைச்சரவையில் சமர்ப்பிப்பு

நீதி, சிறைச்சாலைகள் விவகாரம் மற்றும் அரசியலமைப்பு திருத்தம் துறை அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸவினால் கடந்த 23ம் திகதி, அரசியலமைப்பின் 21வது திருத்த சட்டவரைவு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதையடுத்து, பிரதமர் ரணில் விக்ரமசிங்க கருத்து தெரிவித்திருந்தார்.

இந்த சட்டவரைவு குறித்து மே மாதம் 27ம் திகதி வெள்ளிகிழமையன்று கலந்துரையாட, உடனடியாக அனைத்து கட்சி தலைவர்களிடமும் சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இறுதி சட்டவரைவு தயாரிக்கப்பட்டு, அனுமதிக்காக அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, நாடாளுமன்ற அனுமதிக்காக, சபையில் சட்டவரைவு சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### 21வது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள யோசனைகள் என்ன?

* நிறைவேற்று அதிகார ஜனாதிபதி அதிகாரத்தை வரையறுத்தல்.

* அரசியலமைப்பு சபையொன்றை ஸ்தாபித்தல்.

* சுயாதீன ஆணைக்குழுவை மீண்டும் ஸ்தாபித்தல்.

* இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர்களை நாடாளுமன்றத்திற்கு அனுமதிக்காதிருத்தல்.

* அரசின் உயர் பதவிகளுக்கான நியமனங்களை நியமிக்கும் அதிகாரம், அரசியலமைப்பு சபைக்கு வழங்குதல்.

* நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை வரையறுத்தல், அரசியலமைப்பின் 21வது திருத்தத்தின் முக்கிய நோக்கமாகும்.

அரசியலமைப்பின் 20வது திருத்தத்தின் ஊடாக வலுவிழக்கச் செய்யப்பட்ட அரசமைப்பு சபை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களை மீண்டும் ஸ்தாபித்து, அதனை மேலும் வலுவடையச் செய்தல் இந்த புதிய சட்டவரைவு ஊடாக முன்மொழியப்பட்டுள்ளது.

உத்தேச புதிய அரசியலமைப்பு சபையில், ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் நாடாளுமன்ற உறுப்பினர், பிரதமர், சபாநாயகர் மற்றும் எதிர்கட்சித் தலைவர் ஆகியோர் இடம் பெறுவர்.

இதைத் தவிர, பிரதமர் மற்றும் எதிர்கட்சித் தலைவர் ஆகியோரினால் நியமிக்கப்படும் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொழிலாளர் சங்கத்தினால் பிரேரிக்கப்படும் தொழிலாளர் ஒருவரும் இதில் இடம் பெறுவர்.

இலங்கை வணிக சபையினால் நியமிக்கப்படும் பிரதிநிதி ஒருவரும், அரசியலமைப்பு சபைக்குள் இடம் பெறுவார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பெயரிடப்படும் அரச பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஒருவரையும் ஜனாதிபதி, இந்த சபைக்கு நியமிக்க வேண்டும்.

பிரதமர் மற்றும் எதிர்கட்சித் தலைவர் ஆகியோர் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் அரசியலமைப்பு சபைக்கு உள்வாங்கப்பட வேண்டும்.



> ஜனாதிபதிக்கு அமைச்சு பொறுப்புக்களை தம்வசம் வைத்திருக்கும் அதிகாரத்தை இல்லாது செய்து, அவருக்கு ஏதேனும் விடயதானங்கள் அல்லது பொறுப்புக்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்க வேண்டும் என சட்டத்தரணிகள் சங்கம் கூறுகின்றது.

இந்த ஆணைக்குழுவின் தலைவராக சபாநாயகர் செயற்படவுள்ளார்.

சுயாதீன ஆணைக்குழுவை மீண்டும் வலுவடையச் செய்து, தேர்தல்கள் ஆணைக்குழு, அரச சேவை ஆணைக்குழு, நீதி ஆணைக்குழு, கணக்காய்வு சேவை ஆணைக்குழு, மனித உரிமை ஆணைக்குழு, இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக் குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு மற்றும் தேசிய கொள்முதல் ஆணைக்குழு ஆகியவற்றை இந்த சட்டமூலத்தின் ஊடாக ஸ்தாபிப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு சபையின் பரிந்துரைகளின் பிரகாரமே, குறித்த ஆணைக்குழுக்களுக்கான தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளை ஜனாதிபதியினால் நியமிக்க முடிகின்றமை விசேட அம்சமாகும்.

அரசியலமைப்பின் 20வது திருத்தத்திற்கு அமைய, ஜனாதிபதியினால் இந்த நியமனங்கள் வழங்கப்படுகின்றது.

இலங்கை பிரஜை அல்லாத அல்லது இரட்டை பிரஜாவுரிமை கொண்ட ஒருவருக்கு, நாடாளுமன்ற பிரவேசத்தை ஏற்படுத்தும் வகையிலான சரத்து, 21வது திருத்தத்தின் ஊடாக ரத்து செய்யப்படுகின்றது.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்படும் சந்தர்ப்பத்திலிருந்து அதனை அமல்படுத்துவதற்கான அதிகாரம், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு கிடைக்கும் என்பது விசேட அம்சமாகும்.

உத்தேச திருத்த சட்டத்தின் மூலம் பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், தலைவர் உள்ளிட்ட மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள், நீதி சேவை ஆணைக்குழு உறுப்பினர்கள், சட்ட மாஅதிபர், அரச கணக்காய்வாளர், போலீஸ் மாஅதிபர், மத்திய வங்கி ஆளுநர், நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான நாடாளுமன்ற ஆணையாளர் மற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோரை, ஜனாதிபதியின் பரிந்துரைக்கு அமைய, அரசியலமைப்பு சபையின் அனுமதிக்கு அமைவாகவே நியமிக்க முடியும்.

இந்த நியமனங்கள் மற்றும் சுயாதீன ஆணைக் குழுக்களுக்கான நியமனங்கள், அரசியலமைப்பு சபையின் பரிந்துரைகள் கிடைத்து, 14 நாட்களுக்குள் அதனை அமலுக்கு கொண்டு வர வேண்டும் என சட்டமூலத்தின் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர்கள், அமைச்சரவை அந்தஸ்த்தற்ற அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்களை, பிரதமரின் பரிந்துரைக்கு அமையவே நியமிக்க வேண்டும் என்பது சிறப்பம்ச மாகும்.

அரசியலமைப்பின் 19வது திருத்தத்திலுள்ள மிக முக்கிய விதிகள், 21வது திருத்தத்தில் சேர்க்கப்படவில்லை என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிக்கின்றது.

இந்த விடயம் தொடர்பிலான தமது கவலையை சுட்டிக்காட்டி, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நீதி அமைச்சர் ஆகியோருக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடிதம் எழுதியுள்ளது.

"அரசியலமைப்பின் 19வது திருத்தத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, ஜனாதிபதி தனக்கான விடயங்கள் மற்றும் பணிகள் வழங்குவதைத் தடுத்தது. எனினும், 21வது திருத்தத்தில் அவ்வாறான ஏற்பாடுகள் உள்ளடக்கப்படவில்லை. அதனால், ஜனாதிபதிக்கு அமைச்சு பொறுப்புக்களை தொடர்ச்சியாக வைத்துக்கொள்வதற்கும், எந்தவொரு விடயதானங்களையும், பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்ளவும், எந்தவொரு அமைச்சின் விடயதானங்களையும், பொறுப்புக்களையும் ஏற்றுக் கொள்ள முடியும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

21வது திருத்தத்தற்கு, அரசியலமைப்பின் 44(2) வது சரத்து உள்வாங்கப்பட வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிக்கின்றது.

ஜனாதிபதிக்கு அமைச்சு பொறுப்புக்களை தம்வசம் வைத்திருக்கும் அதிகாரத்தை இல்லாது செய்து, அவருக்கு ஏதேனும் விடயதானங்கள் அல்லது பொறுப்புக்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்க வேண்டும் என சட்டத்தரணிகள் சங்கம் கூறுகின்றது.

இதைத்தவிர, அரசியலமைப்பின் 19வது திருத்தத்திற்கு மாறாக, நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் நான்கு ஆண்டுகளின் பின்னர் மாத்திரமே ஜனாதிபதியினால் நாடாளுமன்றத்தை கலைக்க முடியும் வகையிலும், நாடாளுமன்றத்தை ஒத்தி வைத்தல் மற்றும் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு காணப்படும் அதிகாரங்கள் அவ்வாறே காணப்படுவதாகவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிக்கின்றது. நாடாளுமன்றத்தை கலைப்பதற்கான ஏற்பாடுகள், 19வது திருத்தத்தில் இருந்தவாறான ஏற்பாடுகளை மீண்டும் கொண்டு வர வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிடுகின்றது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் யோசனைகளையும் 21வது திருத்தத்தில் உள்ளடக்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ, பிரதமர் ரணில் விக்ரமசிங்க சிங்க மற்றும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ ஆகியோருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

01. அரசியலமைப்பு சபை அனுமதியுடன் (மத்திய வங்கி ஆளுநர் தவிர்த்த) நியமிக்கப்படும் நிதி சபை உறுப்பினர்களுக்கான ஏற்பாடுகள்.

02. அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண ஆளுநர்கள், தூதுவர்கள், தூதுக்குழுக்களின் பிரதானிகளை நியமிப்பதற்கான ஏற்பாடுகள் - அமைச்சுக்களுடன் கலந்துரையாடி, பிரதமரின் ஆலோசனைக்கு அமைய முன்னெடுக்கப்பட வேண்டும்.

03. ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குவதற்கு தேவையான ஏற்பாடுகள் - அரசியலமைப்பு சபையின் பரிந்துரைகளுக்கு மத்தியில் ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனத்தின் பரிந்துரைகளுக்கு அமைய முன்னெடுக்கப்பட வேண்டும்.


04. சுயாதீன ஆணைக்குழுக்களின் நிதி சுதந்திரம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான ஏற்பாடுகள்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தவிர்த்த, அரசியலமைப்பு சபையின் ஏனைய உறுப்பினர்களின் எண்ணிக்கையை மூன்றிலிருந்து ஐந்து வரை அதிகரிக்கப்பட வேண்டும் என்பதுடன், 17வது திருத்தத்தில் காணப்பட்ட விதத்தில் அரசியலமைப்பு சபையின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 7ல் இருந்து 5ஆக குறைக்க வேண்டும் என சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிக்கின்றது.

21வது திருத்தம் இலங்கைக்குள் அமல்படுத்துவது அத்தியாவசிய நடவடிக்கை என்பதனால், அதனை உடனடியாக நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

08. 

கீழுள்ள முக்கோண வடிவில் பக்கமொன்றின் எண்கள் மூன்றை கூட்டும் போது 18 வரக்கூடியதாக 4, 6, 10, 12 ஆகிய எண்களினால் வெற்றுக் கூடுகளை நிரப்புக.

(1) A - 12, B - 14, C - 4, D - 8
(2) A - 10, B - 12, C - 4, D - 6
(3) A - 10, B - 12, C - 6, D - 4

- **பின்வரும் கவிதையை வாசித்து 09, 10 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிக.**

தேசம் நமது தெய்வம் - இதைத்
தெரிந்து கொள்ளும் தம்பி
பாசம் எல்லாம் கொட்டி - அதைப்
பாதுகாக்க வேண்டும்


பாட்டன், பாட்டி வாழ்ந்த - எங்கள்
பரம்பரைகள் வாழ்ந்த
நாட்டை வணங்க வேண்டும் - அதன்
நாமம் போற்ற வேண்டும்.

09. இக்கவிதை புலப்படுத்துகின்ற பிரதான கருத்து யாது?
(1) கடவுள் பக்தி (2) நாட்டுப் பற்று (3) பரம்பரைப் பற்று

10. இக்கவிதையில் வரும் **தேசம், பாசம், நாமம்** ஆகிய சொற்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடிய சொற்கள் முறையே
(1) பூமி, வாஞ்சை, திருமுகம்
(2) நாடு, விருப்பம், திலகம்
(3) நாடு, நேயம், பெயர்

11. அருகருகே அமைந்துள்ள மூன்று முழு எண்களின் கூட்டுத் தொகை 126 ஆகம். எனின் அவ் மூன்று எண்களுள் மிகப் பெரிய எண் யாது?
(1) 41 (2) 42 (3) 43

12. ஆறு பக்கங்களில் **A, B, C, D, E, F** எழுத்துக்கள் ஓர் எழுத்து என்றவாறு குறிப்பிடப்பட்டுள்ள தாயக்கட்டையொன்றின் மூன்று அமைவுகள் கீழே தரப்பட்டுள்ளன.



அவ் தாயக்கட்டையில் **D** என்ற எழுத்து குறிக்கப்பட்ட பக்கத்திற்கு எதிர்ப்பக்கத்திலே உள்ள எழுத்து எது?
(1) A (2) B (3) E

13. தரப்பட்ட கூற்றை அடிப்படையாகக் கொண்டு தவறான விடையைத் தெரிவு செய்க.

**சுமதியின் வகுப்பில் உள்ள அனைவரும் பாட்டுப் பாடுவார்கள். அவர்களுள் பரதன் நன்றாகப் பாடும் திறமையைக் கொண்டிருந்தான்.**

(1) சுமதியை விட பரதன் நன்றாகப் பாட்டுப் பாடுவான்.
(2) பரதன் சுமதியின் வகுப்பில் கல்வி கற்கின்றான்.
(3) பரதனின் வகுப்பில் உள்ள அனைவரும் ஆண்கள் ஆவர்.

14. வெற்றுக் கூட்டினுள் வரவேண்டிய விடையைத் தெரிக.

| | | | |
|---|---|---|---|
| H | G | F | E |
| P | | | M |
| I | | | L |
| A | B | C | D |

(1)


| | |
|---|---|
| N | O |
| K | J |

(2)

| | |
|---|---|
| O | N |
| J | K |

(3)

| | |
|---|---|
| N | O |
| J | K |

15. 

கடிகாரம் X முற்பகல் நேரத்தையும் கடிகாரம் Y பிற்பகல் நேரத்தையும் காட்டுகின்றது. எனின் இரு கடிகாரமும் காட்டும் நேரத்தின் வித்தியாசம் யாது?

(1) 3 மணித்தியாலம் 40 நிமிடங்கள்
(2) 15 மணித்தியாலம் 40 நிமிடங்கள்
(3) 12 மணித்தியாலம் 10 நிமிடங்கள்

## விடைகள்

| | | |
|---|---|---|
| 08. | (3) | A - 10, B - 12, C - 6, D - 4 |
| 09. | (2) | நாட்டுப் பற்று |
| 10. | (3) | நாடு, நேயம், பெயர் |
| 11. | (3) | 43 |
| 12. | (1) | A |
| 13. | (3) | பரதனின் வகுப்பில் உள்ள அனைவரும் ஆண்கள் ஆவர். |
| 14. | (2) | O N / J K |
| 15. | (2) | 15 மணித்தியாலம் 40 நிமிடங்கள் |

**கல்வி tv CHANNEL-1**

**28.05.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

**கல்வி tv CHANNEL - 2**

**28.05.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மட்டக்களப்பு மாநகர சபை முன்னெடுக்கும் அபிவிருத்தி செயல்பாடுகளுக்கு உதவுங்கள்!

## மாநகர முதல்வர் சரவணபவன் கோரிக்கை



**மட்டக்களப்பு, மே. 28**

**மட்டக்களப்பு மாநகர சபையினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி செயற்பாடுகள் உள்ளிட்ட மக்கள் நலத் திட்டங்களை தடையின்றி முன்னெடுப்பதற்கும் மாநகர சபையுடன் கைகோர்க்க வருமாறு மட்டக்களப்பு மாநகருக்குள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் வங்கிகள் உள்ளிட்ட நிதி நிறுவனங்களுக்கு மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் அழைப்பு விடுத்துள்ளார்.**

மட்டக்களப்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குள் தமது வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் அரச- தனியார் வங்கிகள் உள்ளிட்ட நிதி நிறுவனங்களின்

பிரதிநிதிகளுக்கும் மாநகர சபையினருக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று நேற்று முன் தினம் மாநகர ஆணையாளர் நா.மதவண்ணன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

ஒரு நாட்டில் அல்லது ஒரு பிரதேசத்தின் வளர்ச்சியில் தனியார் துறையின் பங்களிப்பானது அளப்பரியது. தனியார் துறையினரின் பங்களிப்பு இல்லாமல் நிலையான அபிவிருத்தியை எட்ட முடியாது. அதன் அடிப்படையில் மாநகர சபையின் செயற்பாடுகளில் தனியார் துறையினரையும் பங்குதாரராக இணைத்து நிலையான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கும் வகையில் இந்தக் கலந்துரையாடலானது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே, அரச சார்பற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் சேர்ந்து பல மக்கள் நலத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்ற நிலையில், தற்போது நாட்டில் நிலவும் அரசியல் பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்கும் வகையில், மாநகருக்குள் வர்த்தக செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் ஒவ்வொரு நிதி நிறுவனங்களுடனும் பணியாற்ற எதிர்பார்த்துள்ளோம்.

இதன் ஊடாக மட்டக்களப்பு மாநகர சபையினால் முன்னெடுக்கப் படும் அபிவிருத்தி செயற்பாடுகளையும், மக்கள் நலத் திட்டங்களையும் தடை யின்றி முன்னெடுக்க முடி யும். எனவே மாநகர சபையுடன் கைகோர்க்க வரு மாறு மட்டக்களப்பு மாநகருக்குள்

வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் அனைத்து வங்கிகளுக்கும் நிதி நிறுவனங்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன்-என்றார்.

அத்துடன், மட்டக்களப்பு மாநகர சபையினை இலங்கையில் ஓர் முன்னுதாரணமான சபையாகவும், அழகான நகரமாகவும் மாற்றியமைப்பதற்கு நிதி நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என தான் எதிர்பார்ப்பதாகவும், குறிப்பாக பூங்காக்கள், சந்திகளை அழகுபடுத்தும் செயற்பாடுகளை இதன் ஊடாக மேற்கொள்ள முடியும் எனவும் மாநகர ஆணையாளர் நா.மதவண்ணன் தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் எஸ்.லிங்கேஸ்வரன், மாநகர சபையின் பிரதி ஆணையாளர்

உ.சிவராஜா, பிரதம கணக்காளர் ஹெலன் சிவராஜா, பொறியியலாளர் சித்திராதேவி லிங்கேஸ்வரன் உள்ளிட்ட மாநகர சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் மட்டக்களப்பு மாநகருக்குள் வணிக நடவடிக்கைகளை முன்னெடுத்துவரும் நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டதுடன் தமது கருத்துக்களையும் முன்வைத்திருந்தனர். (அ)

# தென்கிழக்குப் பல்கலையின் 10ஆவது சர்வதேச ஆய்வரங்கு




*அம்பாறை, மே. 28*

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 10ஆவது சர்வதேச ஆய்வரங்கு புதன்கிழமை பல்கலைக் கழக இஸ்லாமிய கற்கைகள் - அரபு மொழி பீடத்தின் கேட்போர் கூடத்தில் உபவேந்தர் பேராசிரியர் ஏ. றமீஸ் தலைமையில் "சமகால சவால்களை எதிர்கொள்வதற்கான பல்துறைசார் ஆய்வு"எனும் தொனிப்பொருளில் இடம்பெற்றது.

இவ்வாய்வரங்கில் சர்வதேச மற்றும் தேசிய பேராளார்கள் பலரும் கலந்து கொண்டனர். பல்துறையி னையும் ஊடறுத்துச் செல்லும் சுமார் 60 இற்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்டன.

ஆய்வரங்கின் இணைப்பாளர் பேராசிரியர் ஏ. ஜௌபர் இம்மகாநாட்டினை நெறிப்படுத்தியதுடன் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஏ. றமீஸ் அவர்களின் தொடக்க உரையுடன் அங்காரா இல்டின் பயாசிட் பல்கலைக்கழக பேராசிரியர் பாதிஹ் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் செய்ட் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஹபீபுல் ஹொங்கர் ஆகியோர் மகாநாட்டின் பிரதான உரைகளை நிகழ்த்தினர்.

சமகாலத்தில் உலகம் எதிர் கொள்ளும் நெருக்கடிகளுக்கு பல்துறை சார் ஆராய்ச்சி அணுகுமுறையினை கையாள்வதன் அவசியம், உலக மயமாதல் செயன்முறையில் ஏற்பட்டு வரும் புதிய மாற்றங்கள் குறித்தும் இவர்களது உரைகள் கவனம் செலுத்தியிருந்தன. தொடக்க நிகழ்வில் ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட கட்டுரைகளின் சுருக்கங்கள் அடங்கிய தொகுப்பு நூல் மின்னியல் இதழாக வெளியிட்டு வைக்கப்பட்டது. பேராளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட தரம்வாய்ந்த கட்டுரைகளை சர்வதேச எமரல்ட் நிறுவனத்தின் அனுசரனையுடன் வெளியிட்டுவைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மகாநாட்டின் இறுதி அமர்வில் கலை கலாசார பீடத்தின் தலைவர் பேராசிரியர் எம்.எம். பாஸில் தொகுப்புரையினை நிகழ்த்தினார்.

ஆய்வரங்கின் ஏற்பாட்டுக் குழு சார்பில் அதன் செயலாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் கே.எம். றிஃப்தி, பொருளாளர் பேராசிரியர் ஏ.எம். எம். முஸ்தபா, ஏனைய குழு அங்கத்தவர்களும் பங்கேற்றிருந்ததுடன் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்கள், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், துறைத்தலைவர்கள், பதிவாளர், நிதியாளர், சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட விரிவுரையாளர்கள், மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# சீன தூதரக அனுசரணையில் உதவிகள் வழங்கும் நிகழ்வு

*அம்பாறை, மே. 28*



சீன-இலங்கை தூதாண்மை உறவு நிறுவப்பட்ட 65ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடும் முகமாக சீன தூதரகத்தினால் பல்வேறு விடயங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதன் ஒருகட்டமாக அம்பாறை மாவட்ட உதைப்பாந்தாட்ட கழகங்களுக்கான உதைப்பந்து விளையாட்டு பொருட்களும், பாதணியும் வழங்கும் நிகழ்வும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள வறுமைக்கோட்டுக்குள் உள்ள குடும்பங்களுக்கான உலருணவு பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வும் ஸ்போர்ட்ஸ் பர்ஸ்ட் பௌண்டசனின் ஏற்பாட்டில் நேற்று முன் தினம் மாலை கல்முனை தனியார் மண்டபத்தில் அமைப்பின் இணைத்தவிசாளர் ஏ.ஜி.எம். அன்வர் நௌசாத் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கைக்கான சீன தூதுவர் கீ செனஹொங் பிரதம அதிதியாகவும் அவரது பாரியார் ஜின் ஜியாங் ஆகியோர் கலந்து கொண்டு தேவையுடைய மக்களுக்கு உணவுப்பொருட்களையும், விளையாட்டு கழகங்களுக்கான பந்து மற்றும் பாதணிகளை கையளித்தனர்.

மேலும் சீனத்தூதுவர் கீ செனஹொங் பொன்னாடை போர்த்தியும் நினைவுச் சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டதுடன் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி அதிபர் யூ.எல்.அமீன் பாடசாலையின் தேவைகள் அடங்கிய மகஜரொன்றை இங்கு சீனத்தூதுவரிடம் வழங்கினார். (அ)

# மீன்பிடிக்கச் சென்ற இரண்டு பேர் மாயம்

*அம்பாறை, மே. 28*

பொத்துவில் பிரதேசத்தில் இயந்திர படகில் மீன்பிடிக்க கடந்த புதன்கிழமை அதிகாலை சென்ற இருவர் காணாமல் போயுள்ளனர்.

இது தொடர்பில் அவர்களது உறவினர்கள் நேற்று முன் தினம் பொத்துவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

பொத்துவில், பாக்கியவத்தை பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய முகமட் நௌவ்பர் மற்றும் 40 வயதுடைய முகமது தாஹீர் என்ற இருவரும் புதன்கிழமை அதிகாலை வீட்டில் இருந்து மீன்பிடிப்பதற்காக பொத்துவில் கடற்கரைக்கு சென்றுள்ளனர்.

பின்னர் அங்கிருந்து இயந்திர படகில் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றவர்கள் இதுவரை கரைக்கு திரும்பவில்லை.

இதனையடுத்து கடற்படையினரின் உதவியுடன் பொலிஸார் இவர்களை தேடும் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)



## 47 ஆயிரம் கி. மீ. வேகத்தில் பூமியை கடந்த சிறுகோள்!

நியூயோர்க், மே 28

பூமியை மணிக்கு 47 ஆயிரம் கி. மீ. வேகத்தில் 2 கி. மீ. அகலமுள்ள சிறுகோள் ஒன்று கடந்து சென்ற காட்சி பதிவு செய்யப்பட்டுள்ளது.

சூரிய குடும்பம் 460 கோடி ஆண்டுகளுக்கு முன் உருவானபோது விடுபட்டுபோன பெரிய அளவிலான கற்பாறைகள் சிறுகோள்கள் என அழைக்கப்படுகின்றன. இவை, சூரியனை நோக்கி அண்டத்தில் சுற்றி வருகின்றன.

இந்த சிறுகோள்கள், பூமிக்கும், சூரியனுக்கும் இடையேயான தொலைவை விட 1.3 மடங்கு குறைவான இடைவெளியில் பூமியை நெருங்கி வரும்போது, அவை ஆபத்து விளைவிக்கக் கூடியவை என வகைப்படுத்தப்பட்டு உள்ளது (பூமிக்கும், சூரியனுக்கும் இடையேயான தொலைவு 9.3 கோடி மைல்கள் ஆகும்). அந்த வகையில் 7335 என பெயரிடப்பட்ட சிறுகோள் ஒன்று பூமியை நேற்று கடந்து சென்றுள்ளது.

இந்த ஆண்டில் பூமியை நெருங்கி பறந்து சென்ற மிக பெரிய சிறுகோளும் இதுவே. இதனை தென்துருவ பகுதியில் உள்ள தொலைநோக்கி ஒன்றின் வழியே படம் பிடித்து உள்ளனர். சூரியனை சுற்றி பல ஆண்டுகளாக சுற்றி வருவதனால் இதனை அப்பலோ சிறுகோள் என்றும் அழைக்கின்றனர்.

இது, வருகிற 2029ஆம் ஆண்டு செப்ரெம்பரில் பூமியை நெருங்கி கடந்து செல்லும். அதன்பின்பு, கூடுதலாக 2055 மற்றும் 2062 ஆகிய ஆண்டுகளிலும் பூமியை நெருங்கியபடி இந்த சிறுகோள் செல்லும். கடந்த முறை 1996 ஆம் ஆண்டு இந்த சிறுகோள் பூமிக்கு மிக அருகே வந்து சென்றது. அப்போது, 40 இலட்சம் கி.மீ. தொலைவில் பூமியை கடந்து சென்றது.

## அமெரிக்காவின் 7 மாகாணங்களில் குரங்கம்மை தொற்றாளர் கண்டறிவு



வாஷிங்டன், மே 28

அமெரிக்காவின் 7 மாகாணங்களில் 9 குரங்கு அம்மை தொற்று நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர் என்று அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் அறிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட சிலர் சமீபத்திய காலங்களில் சர்வதேச பயணங்கள் எதனையும் மேற்கொள்ளாதவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாசசூசெட்ஸ், புளோரிடா, உட்டா, வாஷிங்டன், கலிபோர்னியா, வர்ஜீனியா மற்றும் நியூயோர்க் ஆகிய மாகாணங்களில் குரங்கு அம்மை தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, உலகெங்கும் இதுவரை 20இற்கும் மேற்பட்ட நாடுகளில் 200இற்கும் மேற்பட்டவர்களுக்கு குரங்கு அம்மை தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 100இற்கும் மேற்பட்டவர்கள் தொற்று சந்தேகத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவற்றில் பெரும்பாலான தொற்று நோயாளர்கள் ஐரோப்பிய நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில் குரங்கு அம்மை தொற்று நோய் கண்காணிப்பு நடவடிக்கைகளை அதிகரிக்குமாறு உலக நாடுகளை உலக சுகாதார அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (ஐ)

# சர்வதேச அளவில் பொருளாதாரம் வீழும்!

## தடுப்பது கடினம் என்கிறது உலக வங்கி

வாஷிங்டன், மே 28

சர்வதேச அளவில் பொருளாதார வீழ்ச்சி ஏற்படவாய்ப்புள்ளது என்று உலக வங்கி எச்சரித்துள்ளது.

உலக வங்கியின் தலைவர் டேவிட் மல்பாஸ் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

சமீபத்தில் அமெரிக்க வர்த்தக சபையுடனான சந்திப்பில் பேசிய உலக வங்கித் தலைவர்,

"ரஷ்ய - உக்ரைன் போர் நிலைமை இதில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. உணவு, எரிசக்தி மற்றும் உரங்களின் விலைகள் கடுமையாக உயர்வதால் உலகப் பொருளாதாரச் சரிவு மேலும் அதிகரிக்கக்கூடும். எவ்வாறாயினும், இந்த நிலைமையை தடுப்பது மிகவும் கடினமானது.

சீனாவில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கிய கொரோனா நோய்த் தொற்று பெரும் பாதிப்பை




ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே உலகின் நான்காவது பெரிய நாடான ஜேர்மனியின் பொருளாதாரம் மந்தமடைந்துள்ளது என்றும் உலக வங்கியின் தலைவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

# முன்னிலை உணவு உற்பத்தி நாடான பிரேசிலில் பட்டினி அபாயம் உயர்வு!



பிரேசிலியா, மே 28

உலகின் மிகப்பெரிய உணவு உற்பத்தி நாடான பிரேசிலில் பட்டினி ஆபத்து முன்னெப்போதையும் விட அதிகமாக உள்ளதாக சமீபத்தில் வெளியான ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கட்டத்தில் தங்களுக்கு அல்லது தங்கள் குடும்பத்துக்கு உணவு வாங்க முடியாதவர்களின் வீதம் 2019 இல் 30வீதமாக இருந்து 2021 இல் 36வீதமாக சாதனை மட்டத்துக்கு உயர்ந்துள்ளது என அந்த ஆய்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

2006 ஆம் ஆண்டில் தரவு கண்காணிப்பு தொடங்கியதிலிருந்து இலத்தீன் அமெரிக்காவின் மிகப்பெரிய உணவு உற்பத்தி நாடான பிரேசிலில் உணவுப் பாதுகாப்பின்மை உலக சராசரியை விஞ்சுவது இதுவே முதன் முறை என்று கெட்லியோ வர்காஸ் அறக்கட்டளை புதன்கிழமை வெளியிட்ட தரவுகளின் புதிய பகுப்பாய்வு முடிவு தெரிவிக்கிறது.

விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்யும் உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றாக பிரேசில் இருந்தாலும், பிரேசிலியர்கள் இந்த மோசமான சூழ்நிலையை எதிர்கொள்கின்றனர்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பைத் தொடர்ந்து உணவுப் பொருட்களின் விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளதாக கெட்லியோ வர்காஸ் அறக்கட்டளையின் சமூகக் கொள்கை மையத்தின் பணிப்பாளரும் ஆய்வின் ஆசிரியருமான பொருளாதார நிபுணர் மார்செலோ நேரி கூறினார்.

2021 ஆம் ஆண்டில் தொற்றுநோய்களின் போது பிரேசிலில் உள்ள ஏழ்மையான 20வீதமான மக்களிடையே உணவுப் பாதுகாப்பின்மை 75வீதமாக உயர்ந்தது, 2019 இல் இது 53வீதமாக இருந்தது.

பிரேசிலில் உணவுப் பாதுகாப்பின்மை வீதம் சிம்பாப்வேயின் அளவை நெருங்குகிறது. சிம்பாப்வே உலகின் மிக உயர்ந்த உணவுப் பாதுகாப்பின்மை வீதத்தை (80வீதத்தை) கொண்டுள்ளதாக தரவு சுட்டிக் காட்டுகிறது. (ஐ)

## மனைவி துப்பாக்கி சூட்டில் பலி; கணவர் மாரடைப்பால் மரணம்!

அமெரிக்காவின் ஆரம்ப பாடசாலையில் துப்பாக்கி சூட்டில் பலியான ஆசிரியையின் கணவர் மாரடைப்பால் மரணமானார்.

அண்மையில் அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள தொடக்கப் பள்ளியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 19 சிறுவர்கள் உட்பட 21 பேர் உயிரிழந்தனர்.

இந்த கொடூரச் செயலில் ஈடுபட்ட 18 வயதான இளைஞரை பொலிஸார் சுட்டுக் கொன்றனர்.

பள்ளிச் சிறுவர்களை பாதுகாக்கப் போராடிய ஆசிரியை இம்ரா கார்சியாவும் கொல்லப்பட்டார். அவர் 4ஆம் வகுப்பு ஆசிரியராக இருந்து வந்தார்.

இந்நிலையில் துப்பாக்கிச் சூட்டில் பலியான ஆசிரியை இர்மா கார்சியாவின் கணவர் ஜோ கார்சியா நேற்றுமுன்தினம் மாரடைப்பால் உயிரிழந்தார். இந்தத் தம்பதிக்கு திருமணமாகி 24 ஆண்டுகள் ஆகின்றன. இவர்களுக்கு 4 குழந்தைகள் உள்ளனர். (ஐ)





## உக்ரைனின் 40 நகரங்கள்மீது ரஷ்ய இராணுவம் தாக்குதல்!

கீவ், மே 28

உக்ரைன்மீது போரில் ரஷ்ய படைகள் கிழக்கு உக்ரைனை தாக்க ஆரம்பித்துள்ளன. அங்கு ஒரேநேரத்தில் 40 நகரங்களின்மீது ரஷ்யா தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் பகுதிகளிலேயே இந்தத் தாக்குதல் நடந்து வருகின்றது. இதில், ரஷ்ய படைகள் கை மேலோங்கியுள்ளது. வான்வழி தாக்குதலையும், எறிகணை தாக்குதல்களையும் ரஷ்யா தீவிரப்படுத்தியதே இதற்கு காரணமாகும்.

செவிரோடொனெட்ஸ்க் பகுதியில் நிலைமை மோசமாக உள்ளது. போர் தொடங்கிய நாளில் இருந்து இது வரையில் டொனெட்ஸ்க் பிராந்தியத்தில் மட்டுமே 150 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் கொல்லப்பட்டனர் என்று உக்ரைன் அரசின் தலைமை வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். நாடு முழுவதும் போரில் கொல்லப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை 240 ஆகும். (ஐ)

ஈழநாடு






# பங்களாதேஷுடனான டெஸ்ட்; தொடரை வென்றது இலங்கை!

டாக்கா, மே 28

பங்களாதேஷ் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியை 10 விக்கெட்களால் வெற்றி கொண்டது இலங்கை அணி. இந்த வெற்றி மூலம் 1-0 என்ற கணக்கில் இலங்கை அணி தொடரைக் கைப்பற்றியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி, முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி சகல விக்கெட்க்களையும் இழந்து 365 ஓட்டங்களை பெற்றிருந்தது

பங்களாதேஷ் அணி சார்பில் முஷ்பிகர் ரஹீம் 175 ஓட்டங்களையும், லிட்டன் தாஸ் 141 ஓட்டங்களையும் பெற்றனர். பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் ஆடிய இலங்கை அணி சகல விக்கெட்க்களையும் இழந்து 506 ஓட்டங்களைப் பெற்றது.

இதில், அஞ்சலோ மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 145 ஓட்டங்களையும், தினேஷ் சந்திமால் 124 ஓட்டங்களையும், திமுத் கருணாரத்ன 80 ஓட்டங்களையும், தனஞ்சய டி சில்வா 58 ஓட்டங்களையும், ஓசத பெர்னாண்டோ 57 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில், பங்களாதேஷ் அணியின் ஷகிப் அல் ஹசன் 5 விக்கெட்களையும், எபடோட் ஹூசைன் 148 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து, தமது இரண்டாம் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி சகல விக்கெட்களையும் இழந்து 169 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

அணிசார்பில் ஷகிப் அல் ஹசன் 58 ஓட்டங்களையும், லிற்றன் தாஸ் 52 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

இலங்கையின் பந்துவீச்சில் ஹசித பெர்னாண்டோ 51 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களை கைப்பற்றினார்

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு 29 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. அதன்படி, இலங்கை அணி 3 ஓவர்கள் நிறைவில் 29 ஓட்டங்களை பெற்று போட்டியை வெற்றிக்கொண்டது. (ஐ)

# பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் ஜீன்ஜீன் வரலாற்று சாதனை!

பாரிஸ், மே 28

கரோலினா ப்ளிஸ்கோவாவை அதிர்ச்சி தோல்வி அடையச் செய்த 227ஆம் நிலை வீராங்கனை லியோலியா ஜீன்ஜீன், 2022 பிரெஞ்சு ரென்னிஸ் போட்டியில் வரலாறு படைத்தார்.

மகளிர் ஒற்யைருக்கான 2ஆவது சுற்றில் சிறந்த நுட்பத்திறனுடன் விளையாடிய பிரான்ஸ் வீராங்கனை லியோலியா, 6 - 2, 6 - 2 என்ற நேர் செற்களில் நிரல்படுத்தலில் 8ஆம் இடத்திலிருந்த கரோலினா பிளிஸ்கோவாவை வெற்றிகொண்டார்.

வைல்ட் கார்ட் முறையில் பிரெஞ்சு ரென்னிஸ் போட்டியில் விளையாடும் வாய்ப்பைப் பெற்ற லியோலியா, அற்புதமான ஆற்றல்களை வெளிப்படுத்தி வெற்றியீட்டி 3ஆம் சுற்றுக்கு முன்னேறினார். (ஐ)






# செசபிள் மாஸ்ரர்ஸ் சதுரங்கம் பிரக்ஞானந்தா இரண்டாமிடம்!

சென்னை, மே 28

இரு நாள்களாக நடைபெற்ற செசபிள் மாஸ்ரர்ஸ் சதுரங்க போட்டியின் இறுதிச்சுற்றில் கடைசிக் கட்டத்தில் சீன வீரரிடம் தோற்றார் பிரக்ஞானந்தா.

நேற்றுமுன்தினம் முதல் நாள் போட்டியில் முதல் நாளில் 2.51.5 என சீன வீரர் வென்று முன்னிலை பெற்றார்.

டிங் லிரினுடனான 2-ம் நாள் ஆட்டத்தில் முதல் ஆட்டத்தை சமன் செய்த பிரக்ஞானந்தா, 2ஆம் ஆட்டத்தில் வெற்றி பெற்று முன்னிலை பெற்றார். 3ஆவது ஆட்டத்தை சமன் செய்தார். இறுதிச்சுற்றின் 2ஆம் பகுதியை பிரக்ஞானந்தா வென்று 1-1 என சமன் ஆக்கினார். இதனால் வெற்றியாளரைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு முறை கடைப்பிடிக்கப்பட்டது. இதில், இரு பிளிட்ஸ் ஆட்டங்கள் நடைபெற்றன.

முதல் ஆட்டத்தில் பிரக்ஞானந்தா தவறு செய்ததால் ஆட்டம் சமநிலையில் முடிந்தது. அடுத்த ஆட்டத்தில் அவர் செய்த மற்றொரு தவறால் தோல்வியடைய நேர்ந்தது. இதனால் செசபிள் மாஸ்டர்ஸ் சதுரங்க போட்டியை சீன வீரர் டிங் லிரின் வென்றார். (ஐ)

# மூன்றாவது மகளிர் சம்பியன்ஷிப் பங்கேற்கும் அணிகள் 10ஆக உயர்வு




டுபாய், மே 28

2025இல் நடைபெறவுள்ள ஐ. சி. சி. மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கு முன்னோடியாக நடைபெறவுள்ள 3ஆவது ஐ.சி.சி. மகளிர் சம்பியன்ஷிப் தொடரில் பங்குப்பற்றும் அணிகளின் எண்ணிக்கையை 8இலிருந்து 10ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

10 அணிகள் பங்குப்பற்றும் ஐ. சி. சி. மகளிர் சம்பியன்ஷிப் தொடர் 2022 - 2025 ஆம் ஆண்டு நடத்தப்படுவதுடன் முன்னர் இருந்த 8 அணிகளுடன் பங்களாதேஷும் அயர்லாந்தும் புதிய அணிகளாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா, நியூஸிலாந்து, தென் ஆபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், அயர்லாந்து ஆகிய 10 அணிகளும் ஐசிசி மகளிர் சம்பியன்ஷிப்பில் 3 போட்டிகள் கொண்ட தலா 8 தொடர்களில் விளையாடும். பங்குபற்றும் அணிகளின் இணக்கப்பாட்டுடன் 4 தொடர்கள் சொந்த மண்ணிலும் 4 தொடர்கள் அந்நிய மண்ணிலும் நடத்தப்படும்.

இலங்கை அணி தனது சொந்த மண்ணில் இந்தியா, நியூஸிலாந்து, பங்களாதேஷ், மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய நாடுகளையும் அந்நிய மண்ணில் இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், அயர்லாந்து ஆகிய நாடுகளையும் எதிர்த்தாடும்.

ஐ. சி. சி. போட்டி நிகழ்ச்சிகளுக்கு முன்பதாக உலகம் முழுவதும் உள்ள இரசிகர்களுக்கு உயர்தர கிரிக்கெட் போட்டிகளைக் கண்டுகளிக்கக்கூடியதாக சம்பியன்ஷிப் போட்டிகள் வழைமையாக நடத்தப்படவுள்ளன.

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னின்று நடத்தவுள்ள வரவேற்பு நாடும், ஐசிசி மகளிர் சம்பியன்ஷிப் தொடரில் முதல் 5 இடங்களைப் பெறும் அணிகளுமாக 6 அணிகள் நேரடியாக மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் விளையாட தகுதி பெறும்.

ஐசிசி மகளிர் சம்பியன்ஷிப்பில் மிஞ்சும் 4 அணிகளுடன் மகளிர் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் அணிகளுக்கான தரவரிசை அடிப்படையில் தெரிவாகும் 2 அணிகளுமாக 6 அணிகள் பங்குபற்றும் உலக தகுதி காண் சுற்றின் மூலம் உலகக் கிண்ணப் போட்டியில் பங்குபற்றவுள்ள மற்றைய 2 அணிகள் தீர்மானிக்கப்படும்.

### 5 நாடுகளுக்கு சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் அந்தஸ்து

நெதர்லாந்து, பப்புவா நியூ கினி, ஸ்கொட்லாந்து, தாய்லாந்து, ஐக்கிய அமெரிக்கா ஆகிய இணை உறுப்பு மகளிர் நாடுகளுக்கு உடன் அமுலுக்கு வரும்வகையில் சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

இந்த அணிகளின் சர்வதேச ஒருநாள் போட்டி பெறுபேறுகள் மூலம் கிடைக்கும் தரவரிசை புள்ளிகளின் அடிப்படையில் 2025 உலகக் கிண்ணப் போட்டிக்கான தகுதாண் சுற்றில் விளையாடவுள்ள அணிகள் தீர்மானிக்கப்படும்.

ஐசிசியின் உலகளாவிய வளர்ச்சி வியூகத்திற்கு ஏற்ப இந்த முடிவுகள் ஐசிசி சபையினால் எடுக்கப்பட்டதாக ஐசிசி பிரதம நிறைவேற்று அதிகாரி ஜெவ் அலார்டைஸ் தெரிவித்தார். (ஐ)

## நெல் அறுவடை 50 வீதம் இம்முறை குறைவடையும்

கொழும்பு, மே 28

சிறுபோகத்தில், 50 சதவீதமளவில், அறுவடை குறைவடையக்கூடும் என பேராதனை பல்கலைக்கழக விவசாய பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் புத்திமாரம்பே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

450,000 ஹெக்ரேயர் அளவிலான நிலத்தில் நெற்செய்கை முன்னெடுக்கப்படும். சிறுபோகச் செய்கை குறைவடைந் துள்ள சூழ்நிலையில், 325 000 ஹெக் ரேயர் பரப்பிலான விவசாய நிலத்தில் மாத்திரம் செய்கை ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

இரசாயன உரம் கிடைப்பது தொடர்பில், விவசாயிகள் மத்தியில் உள்ள நிச்சயமற்ற தன்மையே பயிர்ச்செய்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமைக்கு பிரதான காரணமாகும்.

இதன் காரணமாக, சிறுபோகத்தில் 50 சதவீதம் அளவில் அறுவடையில் வீழ்ச்சி ஏற்படும்.

முன்னர் எதிர்வுகூறியது போன்று, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம், எமது உற்பத்தியில் அவசியமான அரிசியை மக்களுக்கு வழங்க முடியாத நிலை ஏற்படும்-என்றார். (அ)

# பிரியா-நடேஸ் தமிழ் அகதி குடும்பத்தை விடுவித்தது அவுஸ்திரேலிய புதிய அரசு!

## பல வருட காலப் போரட்டம் வெற்றி



கான்பரா, மே 28

அவுஸ்திரேலியாவில் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த நடேஸ் - பிரியா மற்றும் பிள்ளைகள் உள்ளிட்ட குடும்பம் குயின்ஸ்லாந்து நகரத்துக்குத் திரும்புவதற்கான நான்கு ஆண்டுகாலப் போராட்டம் வெற்றி பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியாவின் புதிய தொழிற்கட்சி அரசாங்கம் நடேஸ் - பிரியா குடும்பத்துக்கு விசா வழங்கியது. இதன்மூலம் அவர்கள் தற்காலிகமாக பிலோலாவில் வசிக்கவும் வேலை செய்யவும் வழியேற்பட்டுள்ளது.

புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப் பட்டதையடுத்து கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் தமிழ்க் குடும்பம் குடியேற்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளது.

புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப் பட்டநிலையில், நாடுகடத்தலுக்கெதிராக நீண்ட சட்டப்போராட்டத்தை மேற்கொண்டுவந்த நடேஸ் -பிரியா குடும்பத்தினர் பிலோலா சென்று வாழ்வதற்கு அனுமதிக்கப்படுவதாக அவுஸ்திரேலிய இடைக்கால உள்துறை அமைச்சர் ஜிம் சால்மர்ஸ் அறிவித்துள்ளார்.

தனக்கிருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி இக்குடும்பம் பிலோலாவில் பிரிட்ஜிங் விசாவில் வாழ்வதற்கு அனுமதிப்பதாக ஜிம் சால்மர்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இவர்களது குடியமர்வு நிலைமை தொடர்பில் அவுஸ்திரேலிய சட்டங்களுக்கு உட்பட்டு ஆராயப்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு குயின்ஸ்லாந்தின் பிலோலா பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டு, குடிவரவு தடுப்புமுகாமிற்கு கொண்டு செல்லப்பட்ட பிரியா-நடேஸ் குடும்பம் தொடர்ச்சியாக சட்டப்போராட்டத்தை மேற்கொண்டுவந்தது.

தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்தால் பிரியா-நடேஸ் குடும்பம் பிலோலாவில் வாழ அனுமதிக்கப்படுவர் என வாக்குறுதி வழங்கப்பட்டிருந்த நிலையில், இதனை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு இக்குடும்பத்தின் விடுதலைக்காக தொடர்ச்சியாகப் போராடிய ஹோம் ரூ பிலோ அங்கத்தவர்கள் கோரியிருந்த பின்னணியில் அமைச்சரின் அறிவிப்பு வெளியாகியுள்ளது. தற்போது பேர்த்தில் சமூகத்தடுப்பில் வாழ்ந்துவரும் இக் குடும்பம் விரைவில் பிலோலா புறப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
**12 - 03 - 1935**



**மறைவு**
**18 - 05 - 2022**

### சின்னத்தம்பி வேலாயுதம்

(முன்னாள் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர், வலம்புரி, தினக்குரல் முன்னாள் பத்திரிகை ஆசிரியர்)

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வேலாயுதம் அவர்கள் 18.05.2022 புதன்கிழமை அன்று லண்டனில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சின்னத்தம்பி, அசுபதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லத்தம்பி, செல்லாச்சிதம்பதிகளின் அன்புமருமகனும், காலஞ்சென்ற சறோஜனாதேவி அவர்களின் அன்புக் கணவரும், மதிவதனி, மோகன்பாரதி, மாறன் இளங்கோ, மேனகா ஆகியோரின் அன்புத் தந்தையும், பானுகோபன், தமிழ்ச்செல்வி, யசோதினி, தங்கேஸ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தாரணி, கஷ்தூரி, சௌமியா, நீரஜா, அக்ஷ்யன், ஆகர்ஷன், இலக்கியா, அபிநயா, அகானா, அனிஷ், அறியானா, அயான் ஆகியோரின் பாசமிகு பேரனும், கண்மணி, பராசக்தி, தங்கரத்தினம், பாலகுருநாதன், கௌரிதேவி, காலஞ்சென்ற கங்காதேவி, சிறிகிருஷ்ணகாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

**கிரியை**
Sunday, 29 May 2022 1:00 PM - 3:00 PM
Oshwal Ekta Centre 366A Stag Ln, London NW9 9AA, United Kingdom

**தகனம்**
Sunday, 29 May 2022 4:00 PM
Hendon Cemetery & Crematorium Holders Hill Rd, London NW7 1NB, UK

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தொடர்புகளுக்கு:
**மோகன்பாரதி - மகன்** Mobile : +447536556046
**மாறன்இளங்கோ - மகன்** Mobile : +447896045669
**மேனகா - மகள்** Mobile : +447500930569
**மதிவதனி - மகள்** Mobile : +16478598754

தகவல்:
**குடும்பத்தினர்.**

## சகல நீதிமன்ற வலயங்களிலும் சிறுவர் நன்நடத்தை அலுவலகம்

கொழும்பு, மே 28

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஊடாக சிறுவர்கள் குறித்து தேசிய கொள்கை ஒன்றைத் தயாரிப்பதை விரைவுபடுத்துமாறு அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவான கோபா குழு வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், தேசிய கொள்கையைத் தயாரிக்கையில், சகல நீதிமன்ற வலயங்களுக்குள்ளும் நன்நடத்தை அலுவலகம் ஒன்றை நிறுவுவது தொடர்பாகவும் கவனம் செலுத்துமாறும் கோபா குழுவின் அறிக்கையில் பரிந்துரைத்துள்ளது.

சிறுவர்கள் தொடர்பாக ஏற்புடையதாகின்ற சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டம் உள்ளிட்ட சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களைத் திருத்தும் தேவைப்பாடுகளைச் சுட்டிக்காட்டிய கோபா குழு, இந்தச் சட்டமூலங்களை காலத்துக்கு ஏற்ற வகையில் திருத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளது.

இந்தக் கட்டளைச் சட்டங்களைத் திருத்துவதற்கான வேலைத்திட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும், சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச் சட்டம் தொடர்பான சட்டத் திருத்தப்பணிகள் இறுதிக் கட்டத்தில் காணப்படுவதாகவும் அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இணையத்தளப் பயன்பாடு காரணமாக சிறுவர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படுகின்ற துஷ்பிரயோகங்களிலிருந்து அவர்களை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்க உரிய செயன்முறையொன்றை நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் தயாரிக்க வேண்டும் என்றும் கோபா குழுவின் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சிறுவர் சார்ந்த குற்றங்கள் தொடர்பான சம்பவங்களை அறிக்கையிடுகையில் ஊடகங்கள் மேற்கொள்ளும் முறைகேடுகளைத் தடுக்க சமூக நேய ஊடகத் தணிக்கையொன்றை ஏற்படுத்தும் வேலைத் திட்டமொன்றைத் தயாரிக்கு மாறும் குழு பணிப்புரை வழங்கியது. (அ)

## ஓர் ஆசனத்தை வைத்துக்கொண்டு ஜனாதிபதியாகவும் வருவார் ரணில்

### வஜிர அபேவர்தன கூறுகிறார்

கொழும்பு, மே 28

ரணில் விக்ரமசிங்க ஒரே ஒரு ஆசனத்தை வைத்துக்கொண்டு பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் உருவாகும் வல்லமை கொண்டவர் என தான் முன்னர் கூறியது இன்று நடந்து கொண்டிருக்கின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

காலியில் நடைபெற்ற கட்சி உறுப்பினர்களுடனான கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலில் எனக்கு இருக்கின்ற அனுபவங்களை வைத்து நான் ரணில் பாராளுமன்றத்துக்கு தேசியப் பட்டியல் ஆசனம் ஊடாக வரும்போது ஒரு விடயத்தை குறிப்பிட்டேன். அதாவது ஒரு ஆசனத்தை வைத்துக்கொண்டு ரணில் பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் உருவெடுப்பார் என்று நான் கூறினேன். அது தற்போது நடந்து கொண்டிருக்கின்றது.

இன்று ரணில் பிரதமராகிவிட்டார். நான் அன்று கூறிய விடயம் அவ்வாறே நடந்து கொண்டு இருக்கின்றது. அதனால் பதற்றமடையாமல் பொறுமையுடன் பார்த்துக்கொண்டிருங்கள். நான் கூறியது எல்லாம் நடக்கும்.

அதுமட்டுமன்றி டொலர் இல்லாத ரூபாய் இல்லாத ஒரு திறைசேரியையே ரணில் விக்ரமசிங்க பொறுப்பேற்றுக் கொண்டார். அதுவும் மிகவும் தாமதமாகவே ரணிலுக்கு கிடைத்திருக்கின்றது. அப்படி காலியான வெறுமையான திறைசேரி கிடைத்திருந்தாலும்கூட மக்களின் பிரச்னைகளுக்கு பிரதமர் ரணில் தீர்வைப் பெற்றுக் கொடுப்பார்.

சிறிய தாமதம் ஏற்படும். ஆனால் பதற்றப்படாமல் அவசரப்படாமல் பொறுமையுடன் பார்த்துக்கொண்டிருங்கள். பிரச்னைகளை ரணில் விக்ரமசிங்க தீர்த்து வைப்பார்-என்றார். (அ)

## மக்கள்,...

யங்கள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. திறந்திருக்கும் நிலையங்களில் மக்கள் கிலோமீற்றர் கணக்கில் இரவுவேளையிலும் கூட வரிசையில் காத்துக்கிடக்கிறார்கள்.

தற்போதைய நெருக்கடியை தீர்ப்பதற்கு சகல கட்சிகளையும் சேர்ந்த 15 பேர் கொண்ட சிறிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித்தார். ஆனால் அது நியமிக்கப்படவில்லை. ஆளும் கட்சியின் ஆதிக்கத்திலான பெரியதொரு அமைச்சரவையொன்றே நியமிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்களின் வகைதொகை நல்லாட்சி முறையொன்றை அனுமதிக்கப்போவதில்லை என்றே தோன்றுகிறது. நாட்டின் பல பாகங்களிலும் அரசாங்கத்துக்கு எதிராக அமைதிவழியில் ஆர்ப்பாட்டங்களைச் செய்துகொண்டிருப்பவர்களின் நம்பிக்கை இதுவே. மக்களும் அவ்வாறே உணர்கிறார்கள். கடந்த வாரம் பாராளுமன்றம் 27 மணித்தியாலங்கள் கூடியது. அதில் 19 மணித்தியாலங்கள் அரசியல்வாதிகளின் எரிக்கப்பட்ட வீடுகள் பற்றி விவாதிப்பதற்கே செலவிடப்பட்டிருக்கிறது. இதே நிலைமை தொடருமானால் படுமோசமான அராஜக சூழ்நிலைக்கு நாடு தள்ளப்படுவதை எவரினாலும் தடுத்துநிறுத்த முடியாமல் போகும். அத்தகையதொரு அராஜக நிலை அரசியல் கொந்தளிப்புக்கும் வன்முறைக்கும் பட்டினிக்குமே வழிவகுக்கும்.

ஜனாதிபதியினால் 23 அமைச்சுச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சகலருமே பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்கள். இது குறித்து தேசிய சமாதானப் பேரவை பெரும் ஏமாற்றமடைந்திருக்கிறது. இந்தச் செயல் நாட்டின் சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினராக இருக்கும் இனத்துவ மற்றும் மத ரீதியான சிறுபான்மையினத்தவர்கள் மத்தியில் நம்பிக்கையை வளர்க்க உதவப்போவதில்லை. பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகை முன்பாகவும் காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகவும் அமைதிவழியில் ஆர்ப்பாட்டங்களைச் செய்துகொண்டிருந்தவர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகள் தொடர்பில் சாட்சியம் அளிக்க முன்வந்த பொதுநலனில் அக்கறைகொண்ட பிரஜைகளின் கடவுச்சீட்டுகள் தடுத்துவைக்கப்பட்டிருப்பது குறித்தும் நாம் பெரும் ஏமாற்றம் அடைந்திருக்கிறோம். இது பாதிக்கப்பட்டவர்களே குற்றஞ்சாட்டப்படுபவர்களாக்கப்படுவது போன்று அமைகிறது.

அமைச்சரவை பேச்சாளர்களாக நால்வரின் நியமனம் நிலையுறுதியான அரசாங்கம் ஒன்று பதவியில் இருப்பதாக நாட்டு மக்களும் சர்வதேச சமூகமும் நம்புவதற்கு உதவப்போவதில்லை. இத்தகைய பின்புலத்தில் போதுமான பெரும்பாக பொருளாதார கொள்கை கட்டமைப்பு ஒன்று நடைமுறையில் இல்லாதபட்சத்தில் இலங்கைக்கு நிதியுதவிகளை செய்யக்கூடிய நிலையில் தாங்கள் இல்லை என்று உலக வங்கி அறிவித்திருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. அத்தகையதொரு கட்டமைப்பு அரசியல் உறுதிப்பாட்டுக்கும் ஐக்கியத்துக்கும் அவசியமான முன்னிபந்தனையாகும்.

மாற்றத்தைக் கொண்டுவரக்கூடியவர்களை மக்கள் தெரிவுசெய்து புதிய ஆணையை வழங்குவதற்கு வசதியாக தேர்தல்கள் சாத்தியமானளவு விரைவாக நடத்தப்படவேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை கோருகிறது. புதிய ஆணையுடனான அரசாங்கம் ஒன்றினாலேயே நாட்டை இடர்பாட்டில் இருந்து மீட்டெடுப்பதற்கு மக்களினதும் சர்வதேச சமூகத்தினதும் நம்பிக்கையைப் பெறக்கூடியதாக இருக்கும் என்று நாம் நம்புகிறோம்.- என்றுள்ளது. (அ)

## உணவு,...

திர டி கொஸ்டா, தேவிகா டி கொஸ்டா, அருண குமார, சீவானந்தவேல், சமன் தர்மகீர்த்தி, மெத்திகா விதானகே, நலிகா ரணதுங்க, வர்ஷி தண்டெனிய, நிலந்த லியனகே ஆகியோரே இந்த யோசனையை தயாரித்தனர்.

இந்த யோசனைகள் அடங்கிய திட்டத்தை அவர்கள் விவசாய, வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் கையளித்தனர்.

குறுகிய -நடுத்தர - நீண்ட கால என மூன்று பிரிவுகளின் கீழ் விவசாய நடவடிக்கைகள் மற்றும் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துதல் குறித்த இந்த முன்மொழிவை அவர்கள் வகுத்துள்ளனர்.

“எதிர்காலத்தில் இலங்கை சந்திக்கும் உணவு நெருக்கடியை சமாளிக்க வேண்டுமாயின் தீர்மானத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.”, என்று திட்டத்தை அமைச்சரிடம் கையளித்தபோது பேராசிரியர்கள் வலியுறுத்தினர்.

இதன்போது, “திட்டத்தில் உள்ள அனைத்து விடயங்களையும் கருத்தில் கொண்டு முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் உறுதியளித்தார். இலங்கையின் உணவுப் பாதுகாப்புத் திட்டமானது கடந்த பெரும்போகத்திலும், நடப்பு சிறுபோகத்திலும் ஆபத்தான நிலையில் இருந்ததாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

## இயற்கைக்கான,...

ரொஹான் பெத்தியகொடவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

உலகெங்கும் உள்ள புகழ்பெற்ற தாவரவியலாளர்கள் மற்றும் விலங்கியல் நிபுணர்களுக்கு 1888ஆம் ஆண்டு தொடக்கம் வருடாந்தம் லண்டன் லீனியர் சொசைட்டியால் வழங்கப்பட்டு வரும் இந்தப் பதக்கத்தை இலங்கையைச் சேர்ந்த ஒருவர் வெல்வது இதுவே முதல் தடவையாகும். இந்தப் பதக்கத்தை வென்ற இரண்டாவது ஆசியர் என்ற பெருமையையும் கலாநிதி ரொஹான் பெத்தியகொட பெற்றுள்ளார்.

இலங்கையின் நன்னீர் மீன் வளங்கள் குறித்து சிறப்பு ஆய்வை நடத்திய பெத்தியகொட, உலக வங்கி உட்பட பல நிறுவனங்களின் சார்பில் பல்லுயிர் பெருக்கம் தொடர்பான பல ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார். இலங்கையின் பல்லுயிர் ஆராய்ச்சி மற்றும் அதன் முடிவுகளுக்கு அவர் ஆற்றிய பங்களிப்புக்காக இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளதாக விருதுக் குழு தெரிவித்துள்ளது.

லண்டனின் லீனியர் சொசைட்டி, இயற்கை வரலாற்றை ஆராய்ந்து, உலகின் பழமையான செயலில் உள்ள சமூகங்களில் ஒன்றாகும். மேலும் ஸ்வீடிஷ் இயற்கை ஆர்வலர் கார்ல் லின்னேயஸ் (1707-1778) நினைவாக லீனியன் சொசைட்டி என்று பெயரிடப்பட்டது. (ஐ)

## எரிபொருள்,...

தாபனம் மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு ஆகியவற்றின் தலைவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டு, மக் களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்களை தடுப்பதற்காக நிறுவன மட் டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.

நாட்டில் தற் போது நிலவும் எரிபொருள் தட்டுப் பாடு மற்றும் மக்களின் இயல்பு வாழ்க் கைக்காக நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலைமையை போக்க சம்பந் தப்பட்ட முகவர்கள் எடுத்த நடவடிக்கை கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, அவசரமாக தடையின்றி பெற்றோலிய விநியோகத்தைப் பெறுவதற்கான வழிமுறையை வகுக்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

## யாழில் எரிவாயு...

கள், கிராம அலுவலர் பிரிவுகளில் ஒதுக்கப்பட்ட விநியோகஸ்தர்களிடம் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். விநியோகஸ்தர்களும் மேற்படி விபரங்கள் தொடர்பான பதிவேடு ஒன்றைப் பேணுதல் வேண்டும்.

விநியோகஸ்தர்களிடம், ஒரு வீட்டுக்கு ஒரு சிலிண்டர் என்ற முன்னுரிமை அடிப்படையில் பதிவு மேற்கொள்ளப்படுவதை கிராம அலுவலர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும். விநியோகஸ்தர்களுக்கு சிலிண்டர்கள் கிடைக்கப் பெற்றதும் பதிவு அடிப்படையில் அவர்களுக்கான விநியோகம் நடைபெறும். குறித்த நேரத்தில் பதிவு பெற்றவர் சமுகமளிக்காவிடின் பதிவு அடிப்படையில் அடுத்துள்ள பயனாளிக்கு விநியோகிக்கப்படும்.

விநியோகிக்கப்பட்ட விபரம் பிரதேச செயலக மேற்பார்வையில் குடும்ப பங்கீட்டு அட்டையில் திகதி குறிப்பிடப்பட்டு பதிவு செய்தல் கட்டாயமானது.

சிலிண்டரை பெற வருபவர் உரிய கிராம அலுவலர் பிரிவு பங்கீட்டு அட்டை, தே. அ. அட்டையுடன் பங்கீட்டு அட்டையில் பெயருடைய அங்கத்தவர் ஒருவராக இருத்தல் கட்டாயமானது - என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எரிவாயு விநியோகஸ்தர்களுக்கு கிடைக்கப்பெறும் சிலிண்டர்களின் எண்ணிக்கை அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு லிட்ரோ பிராந்திய முகாமையாளரால் வழங்கப்படும்.

கிடைக்கப்பெற்ற எரிவாயு சிலிண்டர்களின் எண்ணிக்கைக்கு அமைவாக விநியோகஸ்தர்களுக்கு விநியோகிக்க வேண்டிய சிலிண்டர்களின் எண்ணிக்கை பிரதேச செயலாளர்களால் யாழ். மாவட்ட விநியோகஸ்தருக்கு அறிவிக்கப்படும். இதை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் எரிவாயுவை வழங்குவர். (ஐ)

## சைக்கிள்...

உயிரிழந்தார். கடந்த செவ்வாய்க்கிழமை சிறுவன் சைக்கிளை செலுத்தியநிலையில் தடுமாறி விழுந்துள்ளார். இதன்போது சிறுவனின் வயிற்றில் கைப்பிடி கம்பி குத்தியது. இதில், படுகாயமடைந்த சிறுவன் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இரு நாட்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில், அது பலனின்றி நேற்று வெள்ளிக்கிழமை சிறுவன் உயிரிழந்தார். (ஐ)

## மகிந்தவை,...

வருகின்றது. ஆட்சேர்ப்பு தகுதிகள் குறைக்கப்பட்ட பின்னர், யோஷித ராஜபக்ஷ கடற்படையில் கடேற் அதிகாரியாக பணி புரிய அனுமதிக்கப்பட்டார். பலரை ஒதுக்கிவிட்டு பிரித்தானியாவில் பயிற்சி பெறவும் அவர் அனுப்பப்பட்டார். இந்தக் காலத்தில் கடற்படையின் உயர் அதிகாரிகளும் இவரின் கட்டளையை ஏற்க வேண்டியிருந்தது என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்நிலையிலேயே 2019 ஆம் ஆண்டு தொடக்கம் மே 23 ஆம் நாள் வரை யோஷித ராஜபக்ஷவின் தலைமையிலான கண்காணிப்பின் கீழ் பிரதமர் பதவியில் இருந்து விலகிய பின்னரும் மகிந்த ராஜபக்ஷவின் பாதுாப்புக்கு கடற்படை சிப்பாய்களை பயன்படுத்தினார் என்று சிங்கள இணையம் ஒன்று நேற்று தெரிவித்தது. (ஐ)

## யாழ். விமான...

பட்ட பின்னரும்கூட இன்றுவரை யாழ்ப்பாணம் விமான நிலையத்தை மீளத் திறப்பதற்கான எந்த ஏற்பாடுகளும் இடம்பெறவில்லை.

இருந்தபோதிலும் பலாலியில் உள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் தற்போதும் தமிழ் இளைஞர்கள் 16 பேர் உட்பட 30 வரையானோர் பணியாற்றுகின்றனர். இவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகளை குறித்த விமான நிலையத்தை நிர்வகிக்கும் நிறுவனம் செலவிடுகிறது. இதன் தொடராகவே குறித்த விமான நிலையத்தை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

2019ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடங்கிய விமான சேவை 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி வரையான ஐந்து மாத காலம் செயல்பட்டபோது வடக்கு மாகாணத்தை சேர்ந்தவர்கள் நன்மையடைந்தனர். இந்தியாவுக்கு செல்லும் பயணிகள் கொழும்பு சென்று அங்கிருந்தே இந்தியாவுக்கு செல்லும் நிலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து நேரடியாக இந்தியா செல்வதற்கான வாய்ப்பு குறித்த காலப் பகுதியில் காணப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே தற்போது விமான நிலையத்தை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எது எப்படி இருப்பினும் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை மூடுவது தொடர்பில் அரசாங்கம் உத்தியோகபூர்வமாக தகவல் தெரிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சவேந்திர,...

துள்ள மிரி ஹானையில் போராட்டம் வெடித்திருந்தது. இதன் பின்னர், கடந்த 9ஆம் திகதி கோட்டா கோ கம, மைனா கோ கம போராட்டக் களங்களிலும் வன்முறைகள் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டன. இதன் தொடர்ச்சியாக அரசியல்வாதிகளுக்கு சொந்தமான வீடுகள் - சொத்துக்கள் எரியூட்டப்பட்டன. இந்த சம்பவங்களுக்கு முப்படையினரின் கவனவீனம் காரணமா என்று அறியுமாறு விசாரிப்பதற்கு முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட, முன்னாள் வான்படைத் தளபதி ரொசான் குணதிலக மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்நாயக்க ஆகியோர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டது.

இவை தொடர்பில் விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட குழுவே இராணுவத் தளபதி பதவியிலிருந்து விலகவுள்ள ஜெனரல் சவேந்திர சில்வாவையும் விசாரிக்கும் என்று நேற்று வெள்ளிக்கிழமை சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

## டெங்கு...

சிறுமிக்கு கடந்த 23ஆம் திகதி காய்ச்சல் இருந் தது. பனடோல் வழங்கப்பட்டதையடுத்து, சிறுமி சுகமானார் என்று கூறப்பட்டது. எனினும், கடந்த புதன்கிழமை சிறுமிக்கு காய்ச்சல் கடுமையாகவே, இணுவிலில் உள்ள தனியார் மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டார்.

அங்கு அவருக்கு மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டதுடன், மாத்திரைகளும் வழங்கப்பட்டதையடுத்து சிறுமி வீட்டுக்கு சென்றார். ஆனால், அன்றிரவே சிறுமிக்கு காய்ச்சல் மேலும் அதிகரித்ததுடன், வாந்தியும் எடுத்துள்ளார். இதையடுத்து, மீண்டும் அதே தனியார் மருத்துவமனையில் சிறுமி சேர்க்கப்பட்டார்.

பின்னர், அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்நிலையில், சிகிச்சை பலனின்றி சிறுமி நேற்று உயிரிழந்தார். அவரின் மரணம் டெங்கு காய்ச்சலாலேயே சம்பவித்ததாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## 21ஆவது,...

அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுடனான கூட்டம் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அவரின் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொள்ளவில்லை. எனினும், அடுத்த கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்கும் என்று தெரிவிக்கப்பட்டது. இதனால், எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்தையும் பெற்று இறுதி முடிவு எட்டப்படும். இந்தக் கூட்டத்திலேயே 21ஆவது திருத்தம் குறித்த வரைவு திருத்தமும் முழுமை பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், 21ஆவது திருத்தம் விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற பொது இணக்கப்பாட்டுக்கு நேற்றைய கூட்டத்தில் பங்கேற்ற அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# 21ஆவது திருத்தம் இல்லையேல் அரசிலிருந்து வெளியேறுவோம்

## சுதந்திரக்கட்சி அறிவிப்பு



கொழும்பு, மே 28

**"அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தச்சட்டமூலம் குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் நிறைவேற்றப்படாவிட்டால், அரசாங்கத்திலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வெளியேறும்."**

-இவ்வாறு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சி தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன் தினம் கூடியது.

இதன்போது 21 ஆவது திருத்தச்சட்டமூலம் தொடர்பில் ஆராயப்பட்டது.

மத்திய குழு கூட்டம் முடிவடைந்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் மஹிந்த அமரவீர,

21 ஆவது திருத்தச்சட்டம் விரைவில் அமுல்படுத்தப்பட வேண்டும். இழுத்தடிப்பு இடம்பெறக்கூடாது. அரசமைப்பு மறுசீரமைப்பு இடம்பெறாவிட்டால், அரசாங்கத்திலிருந்து சுதந்திரக்கட்சி வெளியேறும்-என்றார். (அ)

## இந்தியாவை தொடர்ந்து இலங்கைக்கு உதவ இணக்கம் தெரிவித்தது ஜப்பான்

இலங்கையில் தற்போது நிலவும் நெருக்கடியை தீர்க்க உதவுவதற்கு இந்திய மற்றும் ஜப்பானிய தலைவர்கள் இணங்கியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ஜப்பானிய பிரதமர் புமியோ கிஷிடா ஆகியோருக்கு இடையே குவாட் உச்சி மாநாட்டில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இவ்விடயம் தொடர்பில் இணக்கம் எட்டப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
03 - 10 - 1942



மறைவு
26 - 05 - 2022

### திருமதி திரேசம்மா இம்மானுவேல்
**(சின்ன தெரஸா, செல்ல கிளி)**

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், கனடா Markham ஐ வதிவிடமாகவும் கொண்ட திரேசம்மா இம்மானுவேல் அவர்கள் 26.05.2022 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், நீக்கிலாப்பிள்ளை மக்டலின் தம்பதிகளின் அன்பு மகளும், செபஸ்தியாம்பிள்ளை அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை இம்மானுவேல்(சின்னதம்பி) அவர்களின் அன்பு மனைவியும்,எட்மண்ட் ஜோர்ஜ், காலஞ்சென்ற ஜொய்ஸ் சாந்தகுமாரன், டேமியன் ஜோர்ஜ் , ஆன் லோஜினி யூட், நிரோசினி இம்மானுவேல் ஆகியோரின் பாசமிகு தாயாரும், வெனன்சி ஜோர்ஜ், காலஞ்சென்ற சாந்தகுமாரன் செல்லத்துரை, ஜெயவதனி டேமியன் ஜோர்ஜ், ஜூட் ரெனோல்ட ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான ரோசம்மா(முத்தம்மா), அக்னஸ்(கண்மணி) ஆகியோரின் அருமை சகோதரியும், நீக்கிலாப்பிள்ளை யோசப் மரியநாயகம் (ஆண்டவர்) அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரியும்,ரெரிட்டா டிலக்சி பத்மநாதன், அனிட்டா டெனிஷீயா சாந்தகுமாரன், டீன் ஜோர்ஜ், ஆக்னஸ் ஷாலினி டேமியன் ஜோர்ஜ், ரிவ்னி ஜோவினா ஜோர்ஜ், ஜஸ்டீன் ஜெரமி யூட், ஏட்டிரியன் ஜெரிக் யூட், கீகன் ஜோர்ஜ், ஜெனட் ஜெனிபர் யூட், ஸ்டேபான் டேமியன் ஜோர்ஜ், ரோலண்ட் பிரான்சிஸ், பிரியானா பிரான்சிஸ், ஏய்டன் பிரான்சிஸ், சராயா பிரான்சிஸ் ஆகியோரின் அன்புப் பேத்தியும், ஒலிவியா பத்மநாதன், ஜலா ரோஸ் பத்மநாதன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

*பார்வைக்கு:*
Tuesday, 31 May 2022 5:00 PM - 9:00 PM
Wednesday, 01 Jun 2022 7:30 AM - 9:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*திருப்பலி:*
Wednesday, 01 Jun 2022 9:30 AM
St. Thomas the Apostle Roman Catholic Church 14 Highgate Drive, Markham, ON L3R 3R6, Canada

*நல்லடக்கம்:*
Wednesday, 01 Jun 2022 11:00 AM
Christ the King Catholic Cemetery 7770 Steeles Ave E, Markham, ON L6B 1A8, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**எட்மண்ட் ஜோர்ஜ் - மகன்**

தொடர்புகளுக்கு:
**எட்மண்ட் ஜோர்ஜ் - மகன்** Mobile : +16047240727
**டேமியன் ஜோர்ஜ் - மகன்** Mobile : +33687996054
**ஆன் லோஜினி யூட் - மகள்** Mobile : +447580433379
**நிரோசினி இம்மானுவேல் - மகள்**
Mobile : +16473911294

## பொருளாதார நெருக்கடிக்கு ஓரேயொருவர்தான் காரணம்!

### கூறுகிறார் சரத் பொன்சேகா



கொழும்பு, மே 28

நாடு எதிர்கொண் டுள்ள பிரச்னைகளுக்கு 74 வருட கால ஆட்சி காரணமில்லை என்றும், 2019 ஆம் ஆண்டு ஊடகங்கள் ஊடாக உயர்த்தப் பட்ட ஒரு நபருக்கு பொதுமக்கள் வாக்களித்ததன் காரணமாக அது உருவாக்கப் பட்டது என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2019 ஆம் ஆண்டில் பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கணிசமான அளவு குறைவாக இருந்தது.

2019 ஆம் ஆண்டு பாணின் விலை 50 ரூபாவாகவும், எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை 1350 ரூபாவாகவும், சிமெந்துப் பொதி ஒன்றின் விலை 850 ரூபாவாகவும், ஒரு லீற்றர் டீசல் 120 ரூபாவாகவும் விற்கப்பட்டன. ஒரு கிலோ அரிசி ரூ.100க்கும் குறைவாக விற்பனை செய்யப்பட்டது. குறைந்தபட்ச பஸ் கட்டணம் ரூபா 12. எனவே இது 74 வருட கால பிரச்னையல்ல-என்றார். (அ)

## அடுத்த மாத இறுதிக்குள் கடும் மரக்கறி தட்டுப்பாடு

கொழும்பு, மே 28

அடுத்த மாத இறுதிக்குள் நாட்டில் மரக்கறிகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் என மரக் கறி வியாபாரிகள் மற்றும் பொருளாதார மத்திய நிலைய அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பொருளாதார மையங்களுக் கும் நேற்று முன்தினம் மட்டுப் படுத்தப்பட்ட மரக்கறி கையிருப்பு கிடைத்துள்ளது. இதன் காரணமாக வியாபாரிகள் மற்றும் நுகர்வோர் பாரிய சிர மங்களை எதிர்காலத்தில் சந் திக்க நேரிடும் என தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் விலை உயர் வால் பொருளாதார மையங்க ளுக்கு லொறிகள் வராததால் பல மையங்கள் வெறிச்சோடி காணப்பட்டுள்ளன.

எரிபொருள் விலை அதி கரிப்பு, பயிர்ச்செய்கையிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனால், விவசாயிகள் குறைந்த அளவிலான காய்கறி களை மட்டுமே பொருளாதார மையங்களுக்கு கொண்டு வந் துள்ளனர். இதனால் நேற்று முன்தினம் காய்கறிகளின் மொத்த விலையும் உயர்ந்து காணப்பட்டது.

ஒரு கிலோ உருளைக்கிழங் கின் மொத்த விலை 300 ரூபாவாக அதிகரித்துள்ளது. ஒரு கிலோ காய்ந்த மிளகாய் மொத்த விற்பனை விலை ரூ.1600 ஆக இருந்தது.

ஒரு கிலோ போஞ்சி மொத்த விற்பனை விலை 450 ரூபாவாக இருந்தது.

எதிர்வரும் நாட்களில் மரக்கறிகளின் விலை மேலும் உயரும் என பொருளாதார மைய அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
17 - 09 - 1978



மறைவு
24 - 05 - 2022

### கலைச்செல்வன் குணரெத்தினம்
**உரிமையாளர் - Sai Roti & Short Eats Bakery**

மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனை தேவபுரத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough வை வசிப்பிடமாகவும் கொண்ட கலைச்செல்வன் குணரெத்தினம் அவர்கள் 24.05.2022 செவ்வாய்க்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார், குணரெத்தினம் மகேஸ்வரி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி சந்திரமணிதம்பதிகளின்அன்புமருமகனும்,சந்திரகலா அவர்களின் அன்புக் கணவரும்,கலைச்செல்வி, கலைவாணன், கலைமதி, கலைராஜ், கமல்ராஜ் ஆகியோரின் அன்புச் சகோதரரும், வரதராஜன், அரியமலர், செல்வதீஸ்வனிஸ்மென், சாதனா, சாதனந்தன், சசிகலா, சத்தியரூபன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பத்மநாதன், ஜெயலலிதா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், உஷாந்தினி, அமுலியா, ஞானகீர்த்தன், சர்வேஸ்வரன், நர்மிக்கா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், தர்மிக்கா, செலக்ஸ்ரன், பூமிகா, கயனிஜா, சக்சியா, இபோனிக்கா, நிலக்சிக்கா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

*பார்வைக்கு:*
Sunday, 29 May 2022 10:00 AM - 12:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*கிரியை:*
Sunday, 29 May 2022 12:30 PM - 2:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*தகனம்:*
Sunday, 29 May 2022 2:30 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சதீஸ் - நண்பர்**

தொடர்புகளுக்கு:
**சந்திரகலா - மனைவி** Mobile : +16473008856
**கலைராஜ் - சகோதரன்** Mobile : +94750620000
**குணரெத்தினம் - தந்தை** Mobile : +94750620000
**ஞானகீர்த்தன் - பெறாமகன்** Mobile : +94765484495
**சதீஸ் - நண்பர்** Mobile : +16477168027

*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி
07.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : WEEK END MOVIE- சேவல்
04.30 மணி : மனிதனின் மறுபக்கம்-எம்.ஆர். ராதா



05.00 மணி : அந்தி மந்தாரை-நேரலை
6.00 மணி : எதுசரி எதுபிழை-தமிழ்த் தேசிய கட்சிகளின் மக்களுக்கான பொருளாதார கொள்கைகள் என்ன?



**இரவு**
07.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு



7.30 மணி: டான் சினி மரதன் குறும்பட போட்டி நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: டான் பட்டிமன்றம்-இன்றைய சூழலிலே இளைய தலைமுறையினருடைய புலப்பெயர்வு என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதா இல்லையா?
10.00 மணி : நெற்றிக்கண்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகக்கோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு